Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 கார்த்திகை 01 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷவ்வால் 03 (16.11.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:47

# பொருளாதார நெருக்கடி தீவிரம்; சமாளிக்க முடியாது அரசு திணறல்!

## 6,500 கோடி பெறுமதியான நாணயங்களை அச்சிடத் திட்டம்!

(கொழும்பு)

இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வருகின்ற நிலையில் பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்காக அரசாங்கம் மத்திய வங்கி மூலமாக 6500 கோடி ரூபா பெறுமதியான நாணயத் தாள்களை அச்சிடுவதற்குத் திட்டமிட்டிருப்பதாகவும் –

இதனால் நாட்டில் பாரிய பொருளாதார நெருக்கடி உருவாகக் கூடிய ஆபத்து ஏற்பட்டிருப்பதாகவும் பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையாலும் சமாதான முயற்சிகளில் எந்தவித முன்னேற்றமும் காணப்படாததால் வெளிநாட்டு உதவிகள் கிடைப்பது தொடர்ந்தும் தாமதமடைவதாலும் நாட்டின் பொருளாதார நிலை மோசமாகி வருகிறது.

இந்தப் பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்காக வங்கிகளிலிருந்த வெளிநாட்டில் வதிவோரின் 2500 கோடி ரூபா வைப்பையும் அரசாங்கம் எடுத்துக்கொண்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த இரண்டு நாட்களுக்கு பலத்த மழை தொடருமாம்!

(யாழ்ப்பாணம்)

வங்கக் கடலின் தென்மேற்குப் பகுதியில் புதிய தாழமுக்கம் ஒன்று உருவாகியிருப்பதால் - அடுத்த இரண்டு நாட்களுக்கு யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பலத்த மழைபெய்ய வாய்ப்பிருப்பதாக யாழ். வளிமண்டலவியல் திணைக்கள வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

வங்கக் கடலில் ஏற்பட்ட தாழமுக்கத்தால் கடந்த சில வாரங்களாக யாழ்ப்பாணம் மற்றும் வன்னி உள்ளிட்ட பகுதிகளிலும் கிழக்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எம்.பிக்களுடன் தமிழ்ச்செல்வன் சந்திப்பு!

(கிளிநொச்சி)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழச்செல்வனுக்கும் இடையிலான சந்திப்பொன்று இன்று காலை கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை ஏற்பாடாகி பின்னர் ஒத்திவைக்கப்பட்ட சந்திப்பே இன்று நடைபெறவிருக்கிறது.

இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் பிராந்திய தளபதிகளும், மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர்களும் கலந்துகொள்வர் எனத் தெரியவருகிறது.

நோர்வே வெளியுறவுத்துறை அமைச்சர் ஜான் பீற்றர்சனுக்கும் தமிழீழத் தேசிய தலைவர் பிரபாகரனுக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பு, ஜப்பானிய விசேட பிரதிதி யசூஷி அகாஷிக்கும் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சீரற்ற பஸ் சேவையைக் கண்டித்து நாவற்குழியில் வீதி மறியல் போராட்டம்

(சாவகச்சேரி)

போக்குவரத்துச் சபையின் பஸ் சேவை சீரின்மைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாவற்குழி சந்திக்கு அண்மையில் பொதுமக்கள் வீதி மறியல் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

இந்த வீதி மறியல் போராட்டம் நேற்றுக் காலை 9.00 மணி முதல் 11.00 மணிவரை நீடித்தது. வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் எதையும் மேற்படி பாதையூடாக பயணம் செய்வதற்கு பொது மக்கள் அனுமதிக்க மறுத்தனர்.

இதன் காரணமாக சுமார் மூன்று மணி நேரம் கண்டி வீதி ஊடான போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று நேற்றுக் காலையில் 50 இற்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதற்காகக் காத்திருந்தபோதும் - அவர்களை ஏற்றிச்செல்லாது சென்றதால் ஆத்திரமடைந்த மாணவர்களும் பொதுமக்களுமே மேற்படி வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வாறு பாடசாலை மாணவர்களை பஸ்கள் ஏற்றாமல் செல்லும் சம்பவங்கள் தொடர்ந்து இடம் பெறுவதாக போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டத்தை பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகளுடன்

## மட்டக்களப்பு - அம்பாறையில்

# தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகளுடன் திருமலை இராணுவத் தளபதி சந்திப்பு!

திருகோணமலை மாவட்ட இராணுவ கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க நேற்றுக் காலை முற்பகல் 10 மணியளவில் திருகோணமலையில் இயங்கும் தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பில் திருகோணமலை மாவட்டத்தின் தற்போதைய நிலை - குறிப்பாக புதிதாக அமைக்கப்படும் சோதனைச் சாவடிகள் மற்றும் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் அரசசார்பற்ற நிறுவனங்களின் வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும்,

குறிப்பாக திருகோணமலை பாலம்போட்டாறு பகுதியில் உள்ள தம்பலகாமம் பிரதேச பண்ணை வளர்ப்பாளர்களின் மேய்ச்சல் தரை பற்றிய விடயம் முக்கியமாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாலம்போட்டாறு எனுமிடத்தில் 1000 ஏக்கர் நிலம் மேய்ச்சல் தரையாக தம்பலகாமம் பகுதியினருக்கு பல வருடங்களுக்குப் முன்னர் அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பு - அம்பாறையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்!

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் நேற்று முதல் திடீரென அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த இரண்டு வருடங்களாக செயற்பாடற்றிருந்த அதிரடிப்படையினரின் சகல காவலரண்களும் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. கடந்த யுத்தகாலத்தைப் போன்று வாகனங்கள் அனைத்தும் தடுத்து நிறுத்தப்பட்டு விசாரிக்கப்படுகின்றன.

வாகனச்சாரதிகளின் தகவல்கள் கையெழுத்துக்களுடன் பெறப்பட்டும், நகரப்பகுதிகளும் அதனை அண்டிய பகுதிகளிலும் விசேட அதிரடிப்படையினரின் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதுடன், ரோந்து நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும், கைதுகள் ஆரம்பமாகி உள்ளதாகவும் தெரியவருகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஒன்றரை வயதுக் குழந்தை கிணற்றில் தவறி வீழ்ந்து பலி!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - பொம்மைவெளிப் பகுதியில் இடிந்த கிணறு ஒன்றுக்கு அருகில் விளையாடிக்கொண்டிருந்த ஒன்றரை வயதுப் பெண் குழந்தை ஒன்று கிணற்றில் தவறிவீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்தது.

நேற்று நண்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், பொம்மைவெளியைச் சேர்ந்த ஒன்றரை வயதான சுதாகரன் கென்சியா என்ற பெண் குழந்தையே உயிரிழந்ததாகத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - தனது தந்தையுடன் விளையாடிக் கொண்டிருந்த மேற்படி (12 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவச் சாரதியை தடுத்துவைக்க உத்தரவு

கொடிகாமம் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்தினரின் பவுசர் மோதி இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக - சம்பந்தப்பட்ட இராணுவச் சாரதியை யாழ். சிறையில் தடுத்துவைக்க சாவகச்சேரி பதில் நீதிவான் உததரவிட்டார்.

நேற்றுமுன்தினம் கொடிகாமம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெல உறுமய எம்.பியை

# கட்சியிலிருந்து நீக்குவதற்கு உயர்நீதிமன்றம் தடை உத்தரவு!

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அபாரக்க புஞ்ஞானந்த தேரரை அந்தக் கட்சியிலிருந்து பலவந்தமாக நீக்குவதற்கு எடுத்த தீர்மானத்தை இரத்துச் செய்யுமாறு கொழும்பு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

ஜாதிக ஹெல உறுமய காரணம் எதுவுமின்றி கட்சியிலிருந்து தம்மை நீக்குவதாகவும், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குமாறும் தேர்தல் ஆணையாளருக்கும், நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கும் அறிவித்தமை சட்டவிரோதமானது என புஞ்ஞானந்த தேரர் கொழும்பு உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கில் ஜாதிக ஹெல உறுமயக் (12 ஆம் பக்கம் பார்க...

**ஒரு விடுதலை வீரனின் சாவு ஒரு சாதாரண மரண நிகழ்வல்ல. அந்தச் சாவு ஒரு சரித்திர நிகழ்வு. ஒரு உன்னத இலட்சியம் உயிர்பெறும் அற்புதமான நிகழ்வு. உண்மையில் ஒரு விடுதலை வீரன் சாவதில்லை. அவனது உயிராக இயங்கிவந்த இலட்சிய நெருப்பு என்றுமே அணைந்து விடுவதில்லை. இந்த இலட்சிய நெருப்பு ஒரு வரலாற்றுச் சக்தியாக மற்றவர்களைப் பற்றிக் கொள்கிறது. ஒரு இனத்தின் தேசிய ஆன்மாவை தட்டியெழுப்பி விடுகிறது.**

**வே.பிரபாகரன் – தமிழீழத் தேசியத் தலைவர்**

# பொதுமக்கள் மீதான தாக்குதலுக்கு பொது அமைப்புக்கள் கண்டனம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினரின் போக்குவரத்து விதிகளை மீறி வாகனங்களை ஓட்டுவதால் அப்பாவிப் பொதுமக்களின் உயிர்கள்அநியாயமாகப் பறிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான சம்பவங்கள் இனிமேலும் அதிகரித்தால் இராணுவ வாகனங்கள் வீதிகளில் ஓடமுடியாத நிலை ஏற்படும்.

இவ்வாறு யாழ் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொடிகாமப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இராணுவ பவுசர் வாகனம் வீதியால் சென்று கொண்டிருந்த இந்துகுரு மீது மோதியதில் உயிரிழந்த சம்பவத்தைக் கண்டித்து வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

வீதியால் சென்றுகொண்டிருந்த பவுசர் மோதியதனால், இந்துகுரு உயிரிழந்த சம்பவம் இராணுவத்தினர் மேற்கொண்ட மிலேச்சத்தனமான செயல், இந்தச் சம்பவம் மக்களைக் கொந்தளிக்க வைத்துள்ளது.

இராணுவ ட்ரக் வண்டிகள் மக்களை பலிகொள்ளும்போது அவ்விடத்தில் மக்கள் கொந்தளிப்பதும், எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் தவிர்க்கமுடியாதது.

இராணுவத்தினரின் இவ்வாறான செயலுக்குப் பொலிஸார் துணை போயுள்ளனர். பொலிஸாரின் இந்த நடவடிக்கை மக்களை ஆத்திரமடைய வைத்துள்ளது. சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய பொலிஸாரின் இத்தகைய அடாவடித்தனங்கள் உடன் நிறுத்தப்படவேண்டும்.

இந்தச் சம்பவத்தின்போது செய்தி சேகரிக்கச் சென்ற பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டும் அவர்களது புகைப்படக் கருவிகள் பறிக்கப்பட்டுமுள்ளது. அத்துடன் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மக்கள் மீது கண்ணீர் புகைக்குண்டுகள் வீசப்பட்ட சம்பவங்கள் வன்மையான கண்டனங்களுக்குரியது.

இவ்வாறான சம்பவங்கள் இனிமேல் நடைபெறுவதை அனுமதிக்க முடியாது.

இவ்வாறான சம்பவங்கள் இனிமேல் நடைபெறுவதை மக்கள் வெறுங்கையுடன் பார்த்துக் கொண்டிருக்கமுடியாது என்றும், இத்தகைய கொலைச் சம்பவங்களுக்கு வீதிகளில் எதிர்ப்புப் போராட்டங்களை நடாத்த வேண்டும் எனவும் யாழ். மாவட்ட பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இது குறித்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் - கொடிகாமப் பகுதியில் இராணுவ வாகனம் மோதி பரிதாபகரமான முறையில் இளைஞன் ஒருவர் உயிரிழந்ததும், அதனைத் தொடர்ந்து, அங்கு திரண்ட மக்கள் மீது அடாவடித்தனங்களைப் படையினர் மேற்கொண்டதும், பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டதும், அவர்களது புகைப்படக் கருவிகள் பறிக்கப்பட்டு, நாசமாக்கப்பட்டமை போன்றவை பெரும் விசனத்தை ஏற்படுத்துகின்ற செயல்கள் ஆகும்.

இவ்வாறு அடக்குமுறைகள் எம்மீது திணிப்பதையும் பத்திரிகைச் சுதந்திரத்தினை பறிப்பதையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவ்வாறான பல சம்பவங்கள் இராணுவத்தினரால் தொடர்ந்தும் எம்மண்ணில் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றது. அதில் ஒரு நிகழ்வாகவே இந்த நிகழ்வும் நடந்தேறியுள்ளது.

இவ்வாறான நிகழ்வுகள் இனியும் நடைபெறாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக இராணுவத் தலைமை முன்னெடுக்க வேண்டும். இலங்கை இராணுவத்தின் கண்மூடித்தனமான நடவடிக்கைகளும், ஊடகவியலாளர் உரிமைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தும் செயற்பாடும் சமாதானச் சூழலுக்குப் பங்கம் விளைவிக்கும் செயலாகவே அமையும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெற்றோர் கௌரவிப்பு விழா

நோர்வே நாட்டின் நிதியுதவியுடன் ரீடோ நடத்திய 'பெற்றோர் வீட்டுக் கல்வி' என்ற திட்டத்தில் இணைந்து பயன்பெற்ற பெற்றோரைக் கௌரவிக்கும் விழா இன்று நண்பகல் 12.30 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - நோர்வே நாட்டு பிரதிநிதிகள், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சுப்பிரமணிய சர்மா மற்றும் வலி.தென்மேற்கு பிரதேசசபை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாக ரீடோ யாழ். மாவட்ட இணைப்பாளர் ரி.ஜெயக்குமார் தெரிவித்தார். (44)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான மாதாந்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை காலை 11.30 மணிக்கு பணிமனை ஒன்றுகூடல் மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் எம்.பற்றிக் டிரஞ்சன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் நெடுந்தீவில் மேற்கொள்ளப்படக் கூடிய அபிவிருத்தித் திட்டங்கள் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து மற்றும் மின் விநியோகம் போன்ற சேவைகள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது. (113)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி சந்தைகள் இறைச்சிக் கடைகளுக்கான - மீள்கேள்வி அறிவித்தல் 2005 -

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி : 2004.11.23 நண்பகல் 12.00 மணிவரை.
02. கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி : 2004.11.24 முற்பகல் 11.30 மணி வரை.
03. கேள்வி திறக்கப்படும் திகதி : 2004.11.24 நண்பகல் 12.00 மணி.
04. கேள்வித்தொகை, கேள்விப்பத்திரப்பணம் ஆகியவற்றுக்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 15% சேர்த்து அறவிடப்படும்.
05. மேலதிக விபரங்களை அந்தந்த உபஅலுவலகங்களில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.
06. கேள்விப் படிவங்களின் ஒரு பிரதி உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு, பதிவுத்தபாலில் அனுப்பி வைப்பதுடன், மறுபிரதியினை இந்த அலுவலகத்துக்கு நேரிலோ அன்றேல் பதிவுத்தபாலிலோசேர்ப்பித்தல் வேண்டும்.

### மீள் கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விபரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் |
|---|---|---|---|
| **நெல்லியடி உப அலுவலகம்** | | | |
| 01. நெல்லியடி மரக்கறிச் சந்தை | 1,100,000.00 | 20,000.00 | 1,000.00 |
| 02. நெல்லியடி மீன் சந்தை | 80,000.00 | 2,000.00 | 250.00 |
| 03. கோவிற் சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் உட்பட) | 15,000.00 | 3,500.00 | 250.00 |
| 04. கொட்டடிச் சந்தை | 2,200.00 | 500.00 | 250.00 |
| 05. நெல்லியடி துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் | 183,200.00 | 10,000.00 | 250.00 |
| 06. நெல்லியடி ஆட்டிறைச்சிக் கடை இல.1 | 46,300.00 | 500.00 | 250.00 |
| 07. நெல்லியடி ஆட்டிறைச்சிக் கடை இல.2 | 46,300.00 | 500.00 | 250.00 |
| 08. நெல்லியடி ஆட்டிறைச்சிக் கடை இல.3 | 46,300.00 | 500.00 | 250.00 |
| 09. நெல்லியடி மாட்டிறைச்சிக் கடை | 216,900.00 | 3,000.00 | 250.00 |
| 10. கோவிற்சந்தை மாட்டிறைச்சிக் கடை | 122,300.00 | 3,000.00 | 250.00 |
| 11. கோவிற்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 15,000.00 | 500.00 | 250.00 |
| **உடுப்பிட்டி உப அலுவலகம்** | | | |
| 12. அந்திரான் சந்தை | 13,400.00 | 500.00 | 250.00 |
| 13. நவிண்டில் சந்தை | 4,500.00 | 500.00 | 250.00 |
| 14. உடுப்பிட்டி ஆட்டிறைச்சிக் கடை | 5,000.00 | 500.00 | 250.00 |
| 15. அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 77,100.00 | 3,000.00 | 250.00 |
| 16. உடுப்பிட்டிச் சந்தை துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் | 41,800.00 | 500.00 | 250.00 |
| **கட்டைவேலி உப அலுவலகம்** | | | |
| 17. துன்னாலை வடக்கு சந்தை | 600 .00 | 500.00 | 250.00 |


திரு. ஏ. எம். ஜோசெப்,

செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,
கரவெட்டி.


26. 10. 2004. (C/3367)

## நமது ஈழநாடு கிளிநொச்சியில் நடத்தும் க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான கருத்தரங்கிலிருந்து சில காட்சிகள்!











ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான
அஜித் இருவேடங்களில், பூஜா நடித்த

அட்டகாசம்
பு.நே 10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்

நாகம்ஸ் சுன்னாகம்
இந்தியாவிலும் - இலங்கையிலும் ஒரேதின வெளியீடான
R.B.சௌத்திரியின்
சரத்குமார், நமீதா, வடிவேல் நடித்த

சத்ரபதி (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.00, 7.00, 10.00 (பு.நே)

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
2 வது வெற்றிவாரம் (குளிரூட்டப்பட்டது)
தனுஷ், பிரியா நடித்த
(ரீல்ஸ்)
வெகுவிரைவில் : இரவு 9.00 (பு.நே) காட்சியாக
RAMBO - 3
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.00 (பு.நே)
(சி-3319)

திறைஞ்சனஸ் சங்கானை
இன்று முதல்
ராஜ், திவ்யா நடித்த
கேம்பஸ் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
RAMBO - 3
(சி-2723)

# புலிகளின் எதிர்ப்புகளாலேயே ஒப்பந்தம் தாமதமடைகிறது!

## இணையத்தளம் கூறுகிறது

இந்திய - இலங்கை அரசாங்கங்களுக்கிடையே கைச்சாத்திடத் தீர்மானிக்கப்பட்ட பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு தமிழீழ விடுதலைப் புலிகளின் எதிர்ப்புக் காரணமாகவே, கைச்சாத்திடப்படுவது தாமதமாவதாக 'ஏசியன் றிபியூன்' இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் இரு தசாப்தங்களாக நிலவிவந்த இனப்பிரச்சினையைத் தீர்த்துவைக்கும் முகமாக, நோர்வே அரசாங்கம் பரந்த அளவிலான பங்களிப்பை வழங்கி வருகின்ற வேளையில், அதை முடிவுக்குக் கொண்டுவருவதில் இந்தியாவின் தலையீடு அமையும் என, நோர்வே அரசு கடும் கண்டனம் தெரிவித்திருப்பதாகவும் ஏசியன் றிபியூன் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது. (தே)

# வரவு - செலவுத் திட்ட உரை இம்முறை சிங்களத்தில்!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தால் எதிர்வரும் 18ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு-செலவுத் திட்டம் மீதான உரை முதன்முறையாக சிங்கள மொழியில் நிகழ்த்தப்படவுள்ளது. கடந்த காலங்களில் வரவு-செலவுத்திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது, நிதி அமைச்சரால் ஆங்கில மொழியிலே நிகழ்த்தப்பட்டது.

ஆனால் இந்தமுறை நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், சிங்கள மொழியிலேயே வரவு-செலவுத்திட்டம் மீதான உரையை நிகழ்த்தவுள்ளதாக நிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

மேலும் தனது உரையில் ஏற்றவகையில் பொருத்தமான புராதனச் சொற்கள் பயன்படுத்தப்படும் எனவும் தெரிவித்துள்ள நிதிஅமைச்சர், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவராக இருந்த ஜே.பெரேராவால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான சிங்களச் சொற்களைப் பயன்படுத்த உள்ளதாகவும் தெரிவித்தார்.

உதாரணமாக மில்லியன், பில்லியன் என்ற சொற்களுக்குப் பதிலாக மில்லியனாயா, பில்லியனாயா போன்ற சொற்கள் பயன்படுத்தப்படும் எனவும் நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# தேசிய ஆலோசனை சபையில் ஐ.தே.கட்சி இணைய முடிவு?

## கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி ஜனாதிபதியின் சமாதானத்துக்கான தேசிய ஆலோசனை சபையில் பங்குகொள்ளக்கூடும் என, தென்னிலங்கையின் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தால் மாத்திரமே, குறிப்பிட்ட சபையில் அங்கம்வகிக்கப் போவதாக ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்து வருகிறது.

எனினும் அண்மையில் ஜனாதிபதிக்கும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னரும், ஜனாதிபதி இந்தியாவுக்குச் சென்று வந்ததன் பின்னரும் ஐக்கிய தேசியகட்சி நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இது தொடர்பாக- மல்வத்த மகாநாயக்கரும், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜி.எல்.பீரிஸிடம் வலியுறுத்தியிருந்தனர்.

இதேவேளை ஐக்கியதேசிய கட்சியின் முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக, அரசாங்கம் தற்சமயம் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதன் மூலமும், ஐக்கிய தேசியக்கட்சிக்கு அரசாங்கம் அழுத்தம் கொடுத்து வருகிறது.

அண்மையில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி திஸநாயக்கவுக்கு எதிராகப் பாரிய குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றத்தின் முன்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையும் இதில் ஒரு கட்டமாகும்.

ஐக்கிய தேசியகட்சி மீது அரசாங்கம் தொடர்ந்தும் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருமாகவிருந்தால், அது கட்சியின் புகழுக்கு பாதகத்தைக் கொண்டுவரும் என்பதால், ஐக்கியதேசியக்கட்சி தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படாவிட்டாலும் கூட, ஜனாதிபதியின் சமாதானத்துக்கான தேசிய ஆலோசனை சபையில் ஏதாவது காரணத்தைக் காட்டி அங்கம் வகிக்க முற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (01)

# எழுநூறு விடுதலைப்புலிகள் கொழும்புக்குள் ஊடுருவலாம்!

## பொலிஸ் அதிகாரி தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபின்னர், இதுவரை 500 முதல் 700 வரையிலான விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கொழும்புக்குள் ஊடுருவியிருப்பதாகப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்ததாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்புக்குள் ஊடுருவியுள்ள விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் நீர்கொழும்பு, வத்தளை, முகத்துவாரம், கொட்டாஞ்சேனை, மட்டக்குளி, கொள்ளுப்பிட்டி, வெள்ளவத்தை, தெஹிவளை, கல்கிசை உட்பட்ட பிரதேசங்களில் தங்கியிருப்பதாகப் புலனாய்வுத் தகவல்கள் மூலம் கண்டறிந்துள்ளதாக அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டது.

இவர்களுள் பெரும்பாலானோர் மட்டக்குளி, வத்தளை, ஹெந்தலைப் பிரதேசங்களில் தங்கியுள்ளதாகவும் இவர்களிடம் பிஸ்டல்கள், வாகனங்கள் உட்பட வேறுபல பொருட்களும் இருப்பதாக அந்த அதிகாரி தெரிவித்தார். (தே)

# கள்ள நோட்டுக்கள் அச்சிட்ட இரு இளைஞர்கள் கைது

றம்புக்கணை மற்றும் ஜின் தோட்ட பகுதிகளிலுள்ள வீடுகளில் வைத்து கள்ளநோட்டுக்கள் அச்சிட்ட இரண்டு இளைஞர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

றம்புக்கணை பகுதியில் பொலிஸார் நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போது, வீடொன்றிலிருந்து அச்சடிக்கப்பட்ட நிலையிலிருந்த பெருமளவு கள்ளநோட்டுக்கள் மீட்கப்பட்டதுடன், இதற்கு காரணமானவரும் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர்கள் கொழும்பு துறைமுக அதிகார சபையில் பணிபுரியும் சிற்றூழியர்களாவர்.

இந்த வீட்டிலிருந்து பத்து ரூபா நோட்டுக்கள் 154, 500 ரூபா நோட்டுக்கள் 80, 20 ரூபா நோட்டுக்கள் 50 என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றினர்.


இந்த வீட்டில் கைதுசெய்த சந்தேக நபர்மீது மேற்கொள்ளப்பட்ட கள்ள நோட்டுக்கள் ஜின் தோட்டவிலுள்ள வேறொரு வீட்டில் அச்சிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வீட்டை சோதனையிட்ட பொலிஸார் அங்கிருந்து 100 ரூபா நோட்டுக்கள் 40, ஒரு 500 ரூபா நோட்டு, 100 ரூபா நோட்டுக்கள் 40, 50 ரூபா நோட்டுக்கள் 25 என்பவற்றை கைப்பற்றியதுடன் இங்கிருந்த சந்தேக நபரையும் கைது செய்தனர். இருவரும் துறைமுக அதிகார சபையில் சிற்றூழியராகப் பணிபுரிபவராவார்.

அத்துடன் இந்தக் கள்ள நோட்டுக்களை அச்சிடுவதற்கு இவர் லேசர் கணினி தொழில்நுட்பத்தை பயன்படுத்தியமையும் கண்டுபிடிக்கப்பட்டது.

இவர்களால் அச்சடிக்கப்பட்ட கள்ள நோட்டுக்கள் புழக்கத்துக்கு விடப்பட்டுள்ளதா என்பது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் கேகாலை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது, இவர்களது விசாரணைகள் முடியும் வரை இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.



யாழ்.சயன்ஸ் அக்கடமி ஆசிரியர்களின் அனுசரணையுடன் - திருகோணமலை பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான நிதியம் ஏற்பாடு செய்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கில் பங்குபற்றிய ஆசிரியர் குழுவினர்.

# புலிகளின் பிரமுகர்களை ஐரோப்பாவில் வைத்து தாக்க போட்டிருந்த திட்டம் அம்பலம்!

ஐரோப்பாவில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களைத் தாக்குவதற்கு அந்நிய நாட்டு பின்னணியுடன், தமிழ்த் தேசிய விரோத சக்திகள் திட்டமிட்டிருப்பது தொடர்பாக தகவல் ஒன்று அம்பலமாகியுள்ளது.

அரசியல் வேலைத்திட்டங்களுக்காக ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்யும் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களையே கொலை செய்வதற்கு அந்த சக்திகள் திட்டமிட்டிருந்ததாகவும் - இதற்காக இலங்கையில் கட்சி என்ற பெயரில் இயங்கும் ஆயுதக்குழுவொன்றின் முகவர்கள் சிலர் சுவிற்சர்லாந்துக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

அவர்கள் சுவிற்சர்லாந்தின் குறுஸ்லிங்கன் என்ற இடத்தில் கடந்த வாரம் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களைத் தாக்குவற்குப் போட்டிருந்த திட்டமும் அம்பலமாகியிருக்கிறது.

புலிகளின் முக்கிய பிரமுகர்களை ஐரோப்பாவில் வைத்து தாக்கிவிட்டு, அரசியல் போட்டியே இதற்குக் காரணம் என்று கூறி, பிரசாரம் செய்வதற்குத் திட்டமிட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பொலிஸாரின் சூட்டில் இளம்பெண் மரணம்!

இரத்தினபுரி மாவட்டம் எம்பிலிப்பிட்டியவில் நேற்றுமுன்தினமிரவு பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், இளம் பெண்ணொருவர் கொல்லப்பட்டார்.

இந்தச்சம்பவத்தையடுத்து, ஆத்திரமடைந்த பொதுமக்கள் நேற்றுமுன்தினம் நண்பகல் உடவளவை பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் மேற்கொண்டனர். மோட்டார் சைக்கிளில் சென்ற இந்தப் பெண்ணை பொலிஸார் சோதனைக்காக நிறுத்திய சமயம் - அதனை மீறிச் சென்றபோது இத்துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தையடுத்து, ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள் பொலிஸாருக்கு எதிராக நேற்று வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்த பின்பு, உடவளவை பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு கற்களை வீசித் தாக்குதல மேற்கொண்டனர். இவர்களைக் கலைப்பதற்காக பொலிஸாரால் கண்ணீர்ப் புகை பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸார் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இதேவேளை, நேற்றுமுன்தினம் இரவு பாணந்துறை பிரதேசத்தில் இசை நிகழ்ச்சியொன்றில் இரு தரப்பினருக்கிடையில் ஏற்பட்ட கோஸ்டி மோதலில், இருவர் கொல்லப்பட்டனர். வீடொன்றும் தீக்கிரையாக்கப்பட்டது.

இது ஒரு புறமிருக்க கம்பஹா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரண குணவர்தனாவின் இல்லம் மீது இனந்தெரியாத நபர்களால் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனையடுத்து இவரது வீடு சேதமடைந்துள்ளது. இது அரசியல் வன்முறை என பொலிஸார் தெரிவித்தனர். (01)

# தனியார் மயமாக்கலுக்கு ஜே.வி.பி. கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துக்குச் சொந்தமான பெற்றோல் நிரப்பு நிலையங்களை தனியார் மயமாக்குவதற்கு- ஜே.வி.பியின் தொழிற்சங்கம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ஏற்கெனவே தனியார் மயமாக்கப்பட்டுவிட்ட நிலையில், பெற்றோல் நிரப்பு நிலையங்களின் மீதான அரசின் கட்டுப்பாடுகளை இழக்கும் வகையிலான, இந்த தனியார் மயமாக்கலை எதிர்த்து வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தப் போவதாகவும் அந்த அமைப்பு அறிவித்துள்ளது.

ஜே.வி.பி. தொழிற்சங்கத் தலைவர் லக்ஷ்மன் ஆனந்த இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது-

மின்சக்தி மற்றும் எரிபொருள் துறை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவுடன் இது தொடர்பான பேச்சுக்கள் அதிருப்தி அளிக்கின்றன.

இப்பொழுது எங்கள் முன்னுள்ள ஒரே வாய்ப்பு வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்துவதுதான். இந்த வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தப்பட்டால், இலங்கையில் பாதுகாப்புத் தரப்பு உள்ளிட்ட பெரும் பகுதிகள் கடும் பாதிப்புகள் ஏற்படும்.

இந்த வேலை நிறுத்தம் தொடர்பாக, இறுதி முடிவெடுப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது என்றார்.

இதனிடையே இந்த வேலை நிறுத்த எச்சரிக்கையை நிராகரித்த அமைச்சர் சுசில் பிறேம ஜெயந்த இந்தமுடிவு தவறானது என்றும், இது தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

# இராணுவம் பலம்பெற்றிருப்பது இராணுவ நலன்களுக்கு சிறந்ததே

## - சாந்தகொட்டேகொட தெரிவிப்பு

சமாதான சூழ்நிலையிலும், இலங்கை இராணுவம் பலம்பெற்றிருப்பது இராணுவ நலன்களுக்குச் சிறந்ததான செயல் என, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட தெரிவித்தார்.

சமாதானச் சூழலில் இராணுவம் தன்னைப் பலப்படுத்தி, போர் ஒன்றுக்குத் தயாராவதாகவும், வரவு-செலவுத்திட்டத்தில் இராணுவ நலன்களுக்குப் பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், புலிகள் தரப்பு கூறிவரும் குற்றச்சாட்டுக்கள் குறித்து கருத்து வெளியிட்ட இராணுவத்தளபதி-

இராணுவத்தினரின் மனோதிடத்தை வலுப்படுத்துவதற்குப் பயிற்சிகள் அவசியமானவையாகும்.

அத்துடன் இராணுவத்துறை ஒரு தொழிற்துறை என்ற விடயமும் இங்கு கருத்தில் கொள்ளப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

# இரு போட்டிகளில் விளையாட
# கங்கூலிக்கு ஐ.சி.சி. தடை!

(புதுடெல்கி)

இந்தியக் கிரிக்கெட் சபையின் பவளவிழாவை முன்னிட்டு இந்திய-பாகிஸ்தான் அணிகள் மோதிய ஒருநாள் கிரிக்கெட்போட்டி கொல்கத்தாவில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் இந்திய அணி குறிப்பிட்ட நேரத்திற்குள் பந்துவீசி முடிக்கவில்லை. ஒருமணி நேரம் கூடுதலாக எடுத்துக் கொண்டது.


இது தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் சபையின் போட்டி நடுவர் லொயிட், கங்கூலியிடம் விசாரணை நடத்தினார். அதன் பின்னர் 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாட கங்கூலிக்குத் தடை விதித்தார். இந்தத் தடை உடனடியாக அமுலுக்கு வருவதாக அறிவித்தார்.

இதனால், தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2 டெஸ்ட் போட்டிகளில் கப்டன் கங்கூலி ஆட முடியாத நிலை ஏற்பட்டது. இதுகுறித்துச் சர்வதேச கிரிக்கெட் சபையிடம் இந்திய கிரிக்கெட் சபை சார்பிலும், கங்கூலி தரப்பிலும் முறையீடு செய்வது என்று முடிவு செய்யப்பட்டது.

இது தொடர்பாக இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் ரன்பீர்சிங் மகேந்திரா கொல்கத்தாவில் கூறியதாவது -

கப்டன் கங்கூலிக்கு விதிக்கப்பட்ட தடை குறித்து நாங்கள் ஆலோசனை நடத்தினோம். இது குறித்து அடுத்த 24 மணி நேரத்திற்குள் முறையீடு செய்வது என்று முடிவுசெய்து இருக்கிறோம்.

முறையீடு செய்யும் நேரம் எப்போது என்று என்னால் உறுதியாகக்கூற இயலாது. இன்று அல்லது நாளை முறையீடு செய்யப்படும்.



இது தொடர்பாக ஐ.சி.சி. அறிவிக்கும் முடிவைப் பொறுத்தே கங்கூலிக்குப் பதிலாக யாரைத் தேர்வு செய்வது என்று விவாதிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# மைதானத்தில் மோதியதற்காக
# பதான், யுகானாவுக்கு அபராதம்



கொல்கத்தாவில் நடைபெற்ற பவளவிழா ஒருநாள் போட்டியின் போது ஏற்பட்ட மோதல் காரணமாக இர்பான் பதான் மற்றும் யூசுப் யுகானா ஆகியோருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்திய - பாகிஸ்தான் அணிகள் மோதிய ஒருநாள் கிரிக்கட் போட்டியின் போது, இந்திய வீரர் இர்பான் பதான் மற்றும் பாகிஸ்தான் வீரர் யுகானா ஆகியோர்களிடையே நேரடி மோதல் ஏற்பட்டது.

ஆட்டத்தின் 35 ஆவது ஓவரின் போது இர்பான் பதான் நேரடியாக யுகானாவை மோதினார். இருவரும் விலகிச் சென்றபோது யுகானா தனது மட்டையால் இர்பானின் காலைத் தட்டினார்.

இதனால் இருவருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. பின்னர் பாகிஸ்தான் கப்டன் இன்சமாம் தலையிட்டு பிரச்சினையைத் தீர்த்து வைத்தார்.

சர்வதேச கிரிக்கெட் விதிகளை மீறி போட்டியின்போது சண்டையிட்ட வீரர்களுக்கு ஐ.சி.சி. அபராதம் விதித்தது. இதன்படி இர்பான் போட்டிச் சம்பளத்தில் 50 சதவீதமும், யுகானா 75 சதவீதமும் அபராதம் கட்ட வேண்டும் என்று ஐ.சி.சி. தெரிவித்துள்ளது.




# இந்திய அணி தோல்வியால்
# ரசிகர் தீக்குளித்து மரணம்!

(கொல்கத்தா)

கொல்கத்தாவில் இந்திய அணிக்கு ஏற்பட்ட தோல்வி ஒரு இளைஞனின் உயிரைப் பறித்து விட்டது. இந்திய அணியின் தோல்வியால் மனமுடைந்த வாலிபர் தீக்குளித்து தற்கொலை செய்துகொண்டார்.

பாகிஸ்தானுக்கு எதிராக கொல்கத்தா ஈடன் கார்டனில் நடைபெற்ற பவள விழா கிரிக்கெட் போட்டியில் இந்தியா பரிதாபமாகத் தோற்றது.

இந்தப் போட்டியை நாடு முழுவதுமுள்ள கிரிக்கெட் ரசிகர்கள் தொலைக்காட்சியில் ஆர்வமாகப் பார்த்தனர். அப்படிப் பார்த்தவர்களில் ரவிந்திரநாத் (27 வயது) என்ற இளைஞரும் ஒருவர். இவர் மேற்கு வங்க மாநிலம் பிர்பும் மாவட்டத்தில் உள்ள படிகார் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

தீவிர கிரிக்கெட் ரசிகரான ரவிந்திரநாத் இந்தியா விளையாடும் ஒரு போட்டியைக்கூட பார்க்கத் தவறமாட்டார். இந்திய அணியின் மோசமான ஆட்டத்தைப் பார்த்து மனம் வெறுத்தவர், நேராகத் தனது அறைக்குள் சென்று கதவை மூடிக் கொண்டார்.

கதவு, ஜன்னல் இடுக்குகள் வழியாக புகை வருவதைக் கவனித்த அவரது பெற்றோர், கதவை உடைத்துப் பார்த்தபோது எல்லாமே முடிந்து விட்டது. உடம்பு முழுக்க நெருப்புக் காயங்களுடன் தனது கடைசி நிமிடங்களில் இருந்தார் ரவிந்திரநாத்.


வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் அவரது உயிர் பிரிந்தது.

## இந்தியாவுடனான
# ஜெய்ப்பூர் பயிற்சி ஆட்டத்தில்
# தென்னாபிரிக்க அணி அபாரம்!

இந்தியாவுடனான பயிற்சிப் போட்டியில் தென்னாபிரிக்க அணி அபாரமாக ஆடியது. சிறப்பாக ஆடிய கப்டன் ஸ்மித் 86 ஓட்டங்கள் எடுத்தார். இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்பதற்காக தென்னாபிரிக்க அணி இந்தியா வந்துள்ளது.

முதற்கட்டமாக ஜெய்ப்பூரில், சபைத் தலைவர் லெவன் அணிக்கு எதிராக மூன்று நாள் பயிற்சிப் போட்டி ஒன்றில் விளையாடி வருகிறது. முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு ரூடொல்ப், ஸ்மித் ஜோடி நல்ல தொடக்கத்தை அளித்தது. ரூடொல்ப் 26 ஓட்டங்கள எடுத்த நிலையில் ரன் அவுட்டானார்.

அடுத்து வந்த ஆன்டங் நல்ல ஒத்துழைப்பு அளிக்க ஸ்மித் அரைச்சதம் கடந்தார். இந்த ஜோடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை வெகுவாக உயர்த்தியது. வேகப் பந்துவீச்சை விளாசிவந்த இவர்கள் சுழற்பந்தில் திணறினர். இந்த நிலையில் அபாரமாகப் பந்து வீசிய பஹதுலே, தென்னாபிரிக்க அணியின் ஓட்டக் குவிப்பை முழுவதுமாகக் கட்டுப்படுத்தினார்.



இவரது சுழற்பந்துவீச்சில் ஸ்மித் (86), ஆன்டங் (70), கலிஸ் (10), டிப்பென்னர் (14) ஆகியோர் ஆட்டமிழந்தனர். இறுதியில் தென்னாபிரிக்க அணி முதல் இனிங்ஸில் 5 விக்கெட் இழப்புக்கு 226 ஓட்டங்கள் எடுத்தநிலையில் ஆட்டத்தை முடித்துக் கொண்டது.

தொடர்ந்து முதல் இனிங்ஸை ஆடிய சபைத் தலைவர் அணி முதல் நாள் ஆட்டநேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 4 ஓட்டங்கள் எடுத்தது. ரமேஷ் 3, காம்பிர் 0 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

# மத்திய கல்லூரி நடத்திய
# கரம் போட்டி முடிவுகள்!

யாழ் மத்திய கல்லூரி உள்ளரங்கு விளையாட்டுக்கழகம் மக்கள் வங்கி வடவலயத்தின் அனுசரணையுடன் கலாநிதி டி.ரி.நைல்ஸ் ஞாபகார்த்தமாக நடாத்திய கரம் போட்டி முடிவுகள் வருமாறு -

10 வயதின் கீழ் ஒற்றையர் ஆண்கள் :
முதலாமிடம் - மோ. ஆகாஷன்,
இரண்டாமிடம் - ச. ஷாமுவேல்.

10 வயதின்கீழ் ஒற்றையர் - பெண்கள்
முதலாம் இடம் ம. சகிலா,
2 ஆம் இடம் - ம. யோய் காருண்யா.

10 வயதின்கீழ் இரட்டையர் - ஆண்கள்
முதலாம் இடம் : மோ. ஆகாஷன், ம. அபிஷேக்,
2 ஆம் இடம் : சி. டிலக்ஷன், ம. புவிராஜன்.

10 வயதின்கீழ் இரட்டையர் - பெண்கள்
1 ஆம் இடம் : ம. ஜகிலா, : ம. கீதாஞ்சலி,
2 ஆம் இடம் : ம. ஜோய்காருண்யா, : ம. சங்கவி.

12 வயதின்கீழ் ஒற்றையர் - ஆண்கள்,
1 ஆம் இடம் : உ. நிரோஜன்,
2 ஆம் இடம் : ர. வினோஜன்.

12 வயதின்கீழ் ஒற்றையர் - பெண்கள்,
1 ஆம் இடம் : மு. சர்மிலா,
2 ஆம் இடம் : ஞா. திவ்யா.

12 வயதின்கீழ் இரட்டையர் - ஆண்கள்,
1 ஆம் இடம் : ம. ரஜீவன், சு. பிரதாப்.
2 ஆம் இடம் : மோ. ஆகாஷன், கு. திருமுருகன்.

12 வயதின்கீழ் இரட்டையர் - பெண்கள்,
1 ஆம் இடம் : சி. நிரோஜா, சி. நிலானி.
2 ஆம் இடம் : ம. சங்கவி, சு. பிரியங்கா.

14 வயதின்கீழ் ஒற்றையர் - ஆண்கள்,
1 ஆம் இடம் : கி.துஷாந்தன்,
2 ஆம் இடம் : கு.திருவரங்கன்.

14 வயதின்கீழ் ஒற்றையர் - பெண்கள்,
1 ஆம் இடம் : சி. றூபினி,
2 ஆம் இடம் : மு. மதிவதனி.

14 வயதின்கீழ் இரட்டையர் - ஆண்கள்,
1 ஆம் இடம் : தி. துஷாந்தன், ம. விஜிந்தன்.
2 ஆம் இடம் : க.சத்தியவதனன், : க. கவிதாஸ்.

14 வயதின்கீழ் இரட்டையர் - பெண்கள்,
1 ஆம் இடம் - : சி. றூபினி, : மு. மதிவதனி,
2 ஆம் இடம் - : பா. கர்சிகா, : சி. சாரங்கி.

16 வயதின்கீழ் ஒற்றையர் - ஆண்கள்,
1 ஆம் இடம் : ந. சனேந்திரா,
2 ஆம் இடம் :என். கமலரூபன்.

16 வயதின்கீழ் ஒற்றையர் - பெண்கள்,
1 ஆம் இடம் : செ. வாணிஶ்ரீ,
2 ஆம் இடம்: றொ. லூயின் வேணுகா.

16 வயதின்கீழ் இரட்டையர் - ஆண்கள்,
1 ஆம் இடம் : ந. சனேந்திரா, க. சர்மிலன்,
2 ஆம் இடம் :சி.வல்லவகுமரன், :ப.நிலாந்தன்.

16 வயதின்கீழ் இரட்டையர் - பெண்கள்,
1 ஆம் இடம் :றொ. லூயின் வேணுகா, செ. வாணிஶ்ரீ.
2 ஆம் இடம் :ஞா.குயிந்தினி, என். ஜமுனா.

18 வயதின்கீழ் ஒற்றையர் - ஆண்கள்,
1 ஆம் இடம் : மு. குகதீபன்,
2 ஆம் இடம் : ந. யுகேந்திரா.

18 வயதின்கீழ் இரட்டையர் - ஆண்கள்,
1 ஆம் இடம் : மு. குகதீபன், என். றம்மிய இராகுலன்,
2 ஆம் இடம் : ஆர். நிதர்சன், க. சர்மிலன்.

வயதுக்கட்டுப்பாடு அற்றோர் ஒற்றையர் ஆண்கள்,
1 ஆம் இடம் : ஐ. கணேசபாலன,
2 ஆம் இடம் : தா. ஜதார்த்தன்.


ஒற்றையர் பெண்கள் -
1 ஆம் இடம் :சி. கேனகா,
2 ஆம் இடம் : இ. யசோதா.

இரட்டையர் ஆண்கள் -
1 ஆம் இடம் : என். ஏ. மாணிக்கராஜா, எ. பரமானந்தன்,
2 ஆம் இடம் : எஸ். செந்தூரன், எஸ். பிரதீப்.

பெண்கள் இரட்டையர் -
1 ஆம் இடம் - கே. பிறேமிகங்கா, க. திவ்யா,
2 ஆம் இடம் : இ. றூபி, ந. சகீதா.

கலப்பு இரட்டையர் -
1 ஆம் இடம் : இ. பாலமுரளி, பா. சாமந்தி,
2 ஆம் இடம் : தா. ஜதார்த்தன், அ. நித்தியா.

# லொஸ் ஏஞ்சல்ஸ் ரெனிஸ்
# மௌரெஸ்மோ அரையிறுதியில்!




அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் முன்னணி வீராங்கனைகள் பங்கேற்கும் டபிள்யூ.டி.ஏ. சம்பியன் ரெனிஸ் போட்டி நடைபெற்றுவருகிறது.

இந்தத் தொடரில் அமெலி மௌரெஸ்மோ அரையிறுதிக்குத் தகுதி பெற்றார்.

கடந்த சனிக்கிழமை நடந்த லீக் போட்டியில் பிரான்சின் மௌரெஸ்மோ, விம்பிள்டன் சம்பியனான ரஷ்யாவின் மரிய ஷரபோவாவை எதிர்த்து விளையாடினார்.

விறுவிறுப்பாக நடந்த இந்தப் போட்டியில் மௌரெஸ்மோ 7:5, 6:4 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்றார்.

இதன்மூலம் லீக் சுற்றில் தோல்வியைச் சந்திக்காத நிலையில் மௌரெஸ்மோ அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். முன்னதாக நடந்த போட்டியில், வெரா ஸ்வோனரோவாவை (ரஷ்யா) வீழ்த்திய ஷரபோவா ஏற்கனவே அரையிறுதிக்கு முன்னேறிவிட்டார்.

மற்றொரு போட்டியில் - உலகின் முதல் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் டேவன்போர்ட் 3:6, 7:5, 6:1 என்ற செட்களில் சக நாட்டு வீராங்கனையான செரினா வில்லியம்ஸை வீழ்த்தினார்.

ரஷ்யாவின் அனஸ்டாமியா மிஸ்கினா 6:3, 6:3 என்ற செட்களில் சக நாட்டு வீராங்கனையான எலீனா டெமண்டிவாவைத் தோற்கடித்தார்.

# செயலாளர்களின் இடமாற்றங்களை உள்ளூராட்சி மன்றங்களுக்குள்ளேயே வழங்குக

## தொழிற்சங்க சம்மேளனம் கோரிக்கை

உள்ளூராட்சி மன்ற செயலாளர்களின் இடமாற்றங்களைப் பிரதேச செயலகங்களுக்கு மாற்றுவதை நிறுத்தி, உள்ளூராட்சி மன்றங்களுக்குள்ளேயே வழங்க வேண்டும் என்று, அகில இலங்கை உள்ளூராட்சி தொழிற்சங்கங்களின் ஒருங்கிணைந்த சம்மேளனம் உள்ளூராட்சி அமைச்சிடம் கோரிக்கைவிடுத்துள்ளது.

அண்மையில் மாகாணசபையில் உள்ளூராட்சி அமைச்சு அலுவலகத்தில், மேற்படி சம்மேளனத்தின் 15 பேர் கொண்ட குழுவினர் - அமைச்சரைச் சந்தித்தபோதே, வடக்கு-கிழக்கு உள்ளூராட்சி சபைகள் சார்பில் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு -

பிரதேச சபை செயலாளர்கள் திணைக்களங்களுக்கு மாற்றப்படுவதால், பிரதேசசபை செயற்பாடுகள் முடக்கப்படுகின்றன. எனவே, இடமாற்றங்கள் பிரதேச சபைகளுக்குள்ளேயே மேற்கொள்ளப்படவேண்டும்.

செயலாளர்களுக்கான பயண வாகன வசதிகள், படிகள் என்பன வழங்கப்படவேண்டும்

உள்ளூராட்சி சபைகளில் பணியாற்றும் எழுதுவினைஞர்கள் தவிர்ந்த ஏனைய ஊழியர்களுக்கு, இதுவரை பயிற்சிகள் எதுவும் நடத்தப்படவில்லை. அவர்களுக்குப் பயிற்சிகள் நடத்தப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

வருடா வருடம் சிற்றூழியர்களுக்கான பதவியுயர்வுப் பரீட்சைகள் நடத்தப்பட்டு, பதவியுயர்வு வழங்கப்படவேண்டும்.

செயலாளர்களுக்கு முகாமைத்துவம் தொடர்பான சிறந்த முகாமைத்துவப் பயிற்சிகள் உடனடியாக நடத்தப்பட வேண்டும்.

வடக்கு-கிழக்கு வருமான மேற்பார்வையாளர்களுக்கும், ஏனையவர்களுக்குமான மேற்பார்வையாளர்களுக்கான போக்குவரத்துப் படி, ஏனைய கொடுப்பனவுகளுள் காணப்படும் வேறுபாடுகள் நீக்கப்பட வேண்டும் என, பல விடயங்கள் உள்ளடக்கப்பட்ட மகஜர் அகில இலங்கை உள்ளூராட்சி தொழிற்சங்கங்களின் ஒருங்கிணைந்த சம்மேளனத்தின், யாழ். மாவட்டத்தின் இணைப்பாளர் சந்திரகுமாரால் அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது. (44)

# சின்னஞ்சிறு செய்திகள்

### தீவகம் எங்கும் மாவீரர் நாள் ஏற்பாடுகள்

எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ள மாவீரர் தினத்தை முன்னிட்டு, தீவகம் எங்கும் எழுச்சிக் கோலம் பூண்டு வருகிறது.

தவக மக்களால், சாட்டி மாவீரர் துயிலும் இல்லம் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டு வருவதுடன், முக்கிய சந்திகள், வீதிகளில் பொது மக்களாலும், வர்த்தக சங்கங்களாலும் மாவீரர் நினைவுப் பதாகைகளும்கட்டப்பட்டு வருகின்றன. (99)

### முன்னோடிப் பரீட்சை

நெடுந்தீவு கல்விக்கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் 2005 ஆம் ஆண்டு 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான மாதாந்த முன்னோடிப் பரீட்சைகள் நெடுந்தீவில் நடைபெற்று வருகிறது.

இந்த முன்னோடிப் பரீட்சையைப் புலம்பெயர்ந்து, கனடாவில் வசிக்கும் நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கம் "கனடா" என்ற அமைப்பே நிதியுதவி செய்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (113)

### மீனவர்சங்கத்தின் பொதுக்கூட்டம்

சாவற்கட்டு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் -எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சாவற்கட்டு பாலர் பாடசாலை மண்டபத்தில் தலைவர் நாகநாதி பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

இந்தக் கூட்டத்துக்கு கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள், கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள், கடற்புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் மற்றும் பிரதேசப் பொறுப்பாளர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவிருக்கின்றனர். (21)

### வாண்மை விருத்தி செயலமர்வு

யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை மற்றும் கல்வி வலயங்கள் வடமாகாண அதிபர் சங்கத்தின் அனுசரணையுடன் வாண்மை விருத்தி செயலமர்வு எதிர்வரும் 20,21 ஆம் திகதிகளில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.

# வீதியை புனரமைக்குமாறு பொது மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி விக்னேஸ்வரா பின் வீதியையும் மத்தொனி பொதுச் சந்தை வீதியை யும் புனரமைத்துத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வீதியால் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் சந்தைக்குச் செல்லும் வியாபாரிகள் பொதுமக்கள் உட்படப் பலர் பிரயாணம் செய்கின்றனர்.

மழைக் காலங்களில் இந்த வீதியால் வெள்ளம் தேங்கி நிற்பதால், சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது. இந்தப் பாதையைப் பாவிப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு இந்தத் துறைசார்ந்த திணைக்களங்களைக் கேட்டும். மகஜர்களைக் கையளித்தும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனப் பொதுமக்கள் விசனம் அடைந்துள்ளனர். (12)

### சிரமதானம்

மாவீரர் தினத்தை முன்னிட்டு நெடுந்தீவிலுள்ள உயர்தரப் பாடசாலைகளின் மாணவர்களால் நெடுந்தீவிலுள்ள முக்கிய இடங்கள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளன.

நாளை நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலைப் பகுதி, றோ.க.மகளிர் கல்லூரி மாணவிகளாலும் நாளை மறுதினம் நெடுந்தீவு மேற்கு பிரதேசம் சைவப்பிரகாச வித்தியாலய மாணவர்களாலும், 19 ஆம் திகதி நெடுந்தீவு மகாவித்தியாலய மாணவர்களாலும் சுத்தம் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



அண்மையில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெற்ற பெற்றோர் தின நிகழ்வின்போது, இடம்பெற்ற கலை நிகழ்வுகளில் தரம் 1 மாணவர்கள் வழங்கிய நடன நிகழ்வின் ஒரு பகுதி. (31)



நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபை பாலர் பாடசாலையில் இடம்பெற்ற ஆசிரியர் தின நிகழ்வில் ஆசிரியை ஒருவருக்கு பெற்றோர் அன்பளிப்பு வழங்குவதையும், நெடுந்தீவுப் பகுதி வண.போதகர் எஸ்.யோன் செல்வத்தையும் படத்தில் காணலாம். (113)

### அரியாலை பிரதேச மக்களின்

# அடிப்படைத் தேவைகள் குறித்து பொதுமக்களுடன் கலந்துரையாடல்

(அரியாலை)

அரியாலை பிரதேசமக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாகவும், அதனைத் தீர்பதற்கும் முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயும் கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றது

இந்தக் கலந்துரையாடலில் அரியாலை பிரதேசத்தின் அனைத்துக் கிராம அலுவலர்களும், கிராம மக்களும் நலலூர்ப் பிரதேசசெயலக அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

அரியாலைப்பகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளான குடிநீர், மின்சாரம், வீதிகள், வாய்க்கால்கள், பாலங்கள் திருத்தம் போன்ற பிரச்சி னைகளுக்கான விபரங்களும் பொதுக கிணறு, பொது மண்டபம், சித்திப் பாத்தி, செம்மணி மயானங்களின் புனரமைப்பு, மலசலகூடங்கள், வீடுகளை இழந்தவர்களுக்கு வீடுகள் அமைத்துக்கொடுப்பது சம்மந்தமான விபரங்களும் இந்தக் கலந்துரையாடலில் சேகரிக்கப்பட்டன. (55)

# அரியாலை பகுதியில் நுளம்புத்தொல்லை

அரியாலை, பொன்னம்பலம் வதி, இளையதம்பி வீதி, நெடுங்குளம் வீதி, யுதா கோயிலடி, முள்ளி போன்ற பகுதிகளில் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதால், மக்கள் பெரும் துன்பங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தப் பகுதியின் பல வீடுகளில் கடந்தகால யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து சென்ற மக்கள் - இதுவரை மீளக்குடியேறவில்லை.

இந்த வீட்டுக் காணிகளில் பற்றைகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதால், அந்தப் பகுதிகள் பற்றைக் காடுகளாகக் காணப்படுகிறன. இதன் காரணமாக நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகவும், இவற்றைக் கட்டுப்படுத்த நுளம்பு நாசினி இதுவரை விசிறப்படவில்லை.

இதன் காரணமாக மலேரியா, டெங்கு போன்ற நோய்கள் ஏற்படும் அச்சம் தோன்றியுள்ளதாகவும் அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (55)

### வசதிகளை ஏற்படுத்தி வழங்குமாறு கோரிக்கை

வலி. தென்மேற்கு - மானிப்பாய் பிரதேசசபைக்குட்பட்ட பெரியவிளான் கிராமம், அடிப்படை வசதிகளற்ற நிலையில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பெரியவிளான் கிராமத்துக்கான வீதியைப் புனரமைத்து, மலசலகூட வசதிகளை ஏற்படுத்துவதுடன், கிணறுகளையும் அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, நாடாளுமன்ற உறுப்பினர் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதனுக்கு கடிதமூலம் அறிவித்துள்ளார். (91)

### நூல்கள் அன்பளிப்பு

யாழ். பொதுநூல் நிலையத்துக்கு யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட லண்டன் வாசியான, திருமதி ஜெயரட்ணம் காலஞ்சென்ற தனது கணவர் ஜெயரட்ணம் ஞாபகமாக, ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்தார். இவற்றுள் ஆங்கில மொழிக் கதைகளின் தொகுப்புக்கள் அதிகமாகவுள்ளன. (90)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஏழாவது அகவையில்



பெயர் : தே.அகிலா
முகவரி : கூவில், புலோலி கிழக்கு.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :---------------------------
முகவரி :---------------------------
பிறந்த ஆண்டு:---------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
---------------------------
பெற்றோர் ஒப்பம்


# பாடசாலை சுற்றுமதில் அமைப்பதற்கு உதவி

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் - லண்டன் வாழ் அரியாலை மக்களின் உதவியுடன் பாடசாலையின் சுற்றுமதில், 20 அடி உயரமான தண்ணீர்த்தாங்கி என்பன அமைக்கப்பட்டு வருவதுடன், மின்சாரமும் வழங்கப்பட்டுள்ளது.

'பாடசாலையின் நலன்கருதி, பெருந்தன்மையுடன் இந்த வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் லண்டனில் வாழுகின்ற அரியாலை மக்களுக்கு, பாடசாலைச் சமூகம் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதாகப் பாடசாலை அதிபர் பொ.நடராசா தெரிவித்தார். (55)

# பூர்த்தியாக்கப்படாத நிலையில் ஸ்ரீ பார்வதி வித்தியாலய கட்டடம்

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் நிகொட் நிறுவன உதவியுடன் இரண்டு மாடிக்கட்டடம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது.

ஆனால் இந்தக் கட்டடத்தைக் கட்டும் ஒப்பந்தகாரர்கள் - தமக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்கள் காரணமாகத் தொடர்ந்து கட்டடம் கட்டும் பணியைக் கைவிட்ட நிலையில், கடந்த மூன்று மாதங்களாக இந்தக் கட்டடம் அரைகுறை நிலையில் உளளது.


இதுவரை இந்தக் கட்டடம் பூர்த்தியாக்கப்படாததால், கட்டட வசதியின்றி இந்தப் பாடசாலை பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த நடவடிக்கை காரணமாக, இந்தப் பாடசாலையின் பெரும்பகுதி சேதத்துக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது. (55)




## தோல்வியாகும் செயற்கை இதயம்


விஞ்ஞானிகள் மனிதனுடைய எல்லா வகையான உறுப்புக்களையும் செயற்கையாகத் தயாரிக்கும் முயற்சியில், ஓரளவு வெற்றி பெற்றுள்ளனர். ஆனால் செயற்கை இதயத்தை உருவாக்கும் முயற்சியில் மட்டும் அவர்களால் பெருமளவு வெற்றியைப் பெறமுடியவில்லை. ஏனெனில் இயற்கையான இதயத்தினுடைய தசைகள் மிகவும் நுட்பமான முறையில் இயங்கக்கூடியவாறு அமைந்திருக்கின்றன. அதனை மின்சார ரீதியாக இலத்திரனியல் சாதனங்களைக் கொண்டு அமைக்க முயலும்போது, சில வேளைகளில் அது சரியான இதயத்தின் செயற்பாட்டைத் தரமுடியாதவாறு இருக்கிறது. இதயத்தில் காணப்படுகின்ற இயற்கைப் பம்பிகள் மற்றும் வால்புகள் செயற்கையான முறையில் உருவாக்கப்படும் பொழுது, இதயத்தின் இயக்கத்தில் பெருமளவு தாக்கத்தை உருவாக்கக்கூடியவாறு இருக்கின்றன. முதற் தடவையாகச் செயற்கை இதயங்கள் ஒரு நாயில் பரிசோதிக்கப்பட்டது. ஆனாலும், அவை எதிர்பார்த்தளவு வெற்றியைத் தரவில்லை. இதயத்தின் ஆர்முடுகல் வேகம் - இயற்கைக்கும், செயற்கைக்கும் இடையில் மிகவும் வித்தியாசமாக இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. இதேவேளை இந்தச் செயற்கை இதயங்களைப் பொருத் தும்போது பக்கவிளைவாகச் சில நோய்களும் வருவதாக அறியப்பட்டுள்ளது.



## சிடி உலகம்

சந்தைக்கு வந்த புதிதில் மிகவும் விலை கூடுதலாக விற்கப்பட்ட சிடிகள், இப்போது மிகவும் மலிவானதாகக் கிடைக்கின்றன. தற்போது கணினிகள் மனிதர்கள் மற்றும் கருவிகளுடைய பெரும்பாலான வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வதனால், கணினியினுடைய செல்வாக்கு அதிகரித்திருக்கின்றது.

அத்துடன் ஒவ்வொரு தரவுகளும் சிடியில் பதியப்படுகின்றன.



அலுவலகங்களில் இப்போது பாரம்பரியமான பைல்கள் இல்லை. அந்த இடத்தை சிடிக்களே நிரப்பிக்கொண்டுள்ளன. சிடிக்கள் அலுவலகப் பாவனைக்கு மட்டுமல்ல, பலதரப்பட்ட எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கின்றன. பெரும்பாலும் சிடிக்கள் வீடியோ மற்றும் ஓடியோ தேவைகளுக்குப் பயன்படுத்தக் கூடியனவாக இருப்பது, மக்களின் பொழுதுபோக்குத் தேவைகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

இன்ரநெற் மூலம் கிடைக்கின்ற படங்கள் மற்றும் பாடல்களை சிடிக்களில் மக்கள் பதிக்கின்றார்கள். டவுன்லோட் மூலம் பெரும்பாலான புதிய படங்கள் மற்றும் பாடல்களைப் பெறக்கூடியதாக உள்ளது. இதேவேளை இசைக்காக, ஐரோப்பிய நாடுகளில் இருக்கின்ற மக்கள் கூடுதலான பணத்தைச் செலவிடுகின்றார்கள்.


ஆனால், இவற்றை இன்ரநெற் மூலம் பெறுவது, ஓரளவு மலிவானதாக இருக்கும் என ஆய்வாளர்கள் நம்புகின்றார்கள்.

## பாடசாலைகளில் ஈமெயில்



சாதாரண தபால் வசதிகளைவிட ஈமெயிலைப் பாவிப்பது சர்வதேச அளவில் அதிகரித்துக் கொண்டு வருகிறது. இதேவேளை - ஈமெயில் பாவனை எவ்வளவு தூரம் நன்மையளிக்கின்றதோ, அந்த அளவுக்கு தீமை தரக்கூடியதாகவும் இருக்கிறது. பாடசாலைகளில் பரீட்சைகளின் போது மாணவர்கள் ஈமெயில் மூலம் விடைகளைப் பெற்று எழுத முயற்சிக்கின்றார்கள். இதனால் இங்கே ஆசிரியர்கள், மாணவர்களுடைய சரியான பெறுபேறுகளைப் போடமுடியாமல் திண்டாடுகிறார்கள். இதனைவிட, அங்கே மேலும் ஈமெயில்களுடைய பாவனை மாணவர்களை வேறு திசைகளுக்குத் திருப்புவதாகவும் கூறப்படுகிறது. இது அவர்களுடைய திறனை வளர்ப்பதற்கு மட்டுமல்ல, விடியோ விளையாட்டுக்கள் போன்ற தேவையற்ற செயற்பாடுகளையும் ஊக்குவிக்கும் எனக் கூறப்படுகிறது. சில பாடசாலைகளில் இன்ரநெற், ஈமெயில் ஆகிய வசதிகள் மேலோங்கிக் காணப்படுகின்றன. அவை ஆசிரியர் இல்லாமலேயே மாணவர்களுக்குக் கற்பிக்கக்கூடிய வகையில் தொழிற்படுகின்றன. இதனால் மாணவர்கள் கூடியளவு பயன்களைப் பெறக்கூடியதாக இருக்கிறது. ஆனாலும் பரீட்சைகளில் இவற்றைப் பாவிப்பது தடைசெய்யப்படவேண்டும் என ஒரு சாரார் கூறுகிறார்கள்.

## கிறடிட் காட் மோசடி



வங்கிகளில் காணப்படுகின்ற தன்னியக்கப் பணப் பரிமாற்ற முறை, மக்களுக்கு நன்மை பயக்கக்கூடியனவாக உருவாக்கப்பட்டது. ஆனால், தற்பொழுது அவை கிறடிட் காட் மோசடிக்குப் பயன்படுத்தப்பட்டுவருகிறது. கடந்த வருடத்தில் மட்டும் 85விகிதத்தால் மோசடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஏறக்குறைய 61 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்கள் வங்கிகளில் மோசடி செய்யப்பட்டுள்ளன. சங்கேதக் குறியீடுகள் ஒவ்வொரு அட்டைகளுக்கும் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால், இந்தக் குறியீடுகள் இல்லாமலேயே சில மோசடிக்காரர்கள் பணத்தை எடுக்கிறார்கள். இலத்திரனியல் ரீதியாகக் கிறடிட் காட்டில் காணப்படுகின்ற இலக்கங்கள், காந்தவியல் சக்தி மூலம் பதியப்படுகின்றன. இதன் காரணமாக வெகு சுலபமாகப் பணத்தைப் பெறக்கூடியதாக உள்ளது. தற்போது எல்லா வங்கிகளின் தன்னியக்கப் பணம் எடுக்கும் சிற்றறைகளில் கண்ணுக்குத் தெரியாத கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் மோசடிக்காரர்கள் இலகுவில் பிடிபடக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஐரோப்பாவில் மட்டும் 42 மில்லியன் கிறடிட்காட் உரிமையாளர்கள் உள்ளனர். அவர்களில் ஒரு சிலர் மோசடிக்காரர்களாக இருக்கிறார்கள். பிரான்ஸ் நாட்டிலே தற்போது கையொப்பமிடுகின்ற தன்னியக்க இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மோசடிக்காரர்களை ஓரளவு கட்டுப்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சூழல் மாசடைதல் தரும் நோய்கள்

இதய நோய்க்கு மிகவும் முக்கிய காரணமாக அமைந்திருப்பது சூழல் மாசடைதலாகும். கலிபோர்ணியா பல்கலைக்கழகத்தின் ஆய்வுக்குழு எடுத்த ஆராய்ச்சிகளின்படி 800 இதய நோயாளிகளைத் தெரிவுசெய்து, இந்தப் பரிசோதனைக்காக ஆராய்ந்த போது, அவர்களில் அநேகமானவர்கள் இந்த நோய்க்கான காரணி- சூழல் மாசடைதல்தான் என்பதை ஏற்றுக் கொள்கிறார்கள். வாகனங்களில் வருகின்ற புகை மட்டுமல்ல, அவற்றின் ஒலியும் இதற்கான காரணிகளாக அமைகிறது. முதலில் இத்தகைய வழி மாசடைதலின் தாக்கம் சுவாசத் தொகுதியிலேயே அதிகமாக இருக்கிறது. இது மேலும் இரத்தக்குழாய்களையும், நாடியையும் தாக்குகிறது. இதனுடைய தாக்கம் பொதுவாக 60 வயதுக்கு மேல் காணப்படுகின்ற அனைவரிடமும் இருக்கும் எனக் கூறப்படுகிறது. ஐரோப்பாவில் ஏற்படுகின்ற எல்லா இறப்புகளுக்கும் இந்த மாசடைதலே காரணமென, வைத்திய நிபுணர்கள் உறுதிபடக் கூறுகிறார்கள். பெரும்பாலான இதய நோயாளர்களுடைய இதயம் பழுதடைவதற்கு முதல், அவர்களுடைய குருதிமயிர்க் குழாய்கள் மற்றும் சுவாசப்பைகள் ஆகியன பழுதடைகின்றன. இது ஒரு தொடர் நோயாக இருக்கிறது. உண்மையில் இந்த நோய் களுக்கான அடிப்படைக் காரணம் தெரிந்திருந்தும் அதைத் தடுக்கமுயலாமல் இருப்பது பரிதாபத்துக்குரியது.



## இலங்கையில் இல்லை யானை வேட்டை

உலகின் மிகப்பெரிய மிருகமாக யானை கருதப்படுகிறது. குறிப்பாக எல்லா நாடுகளிலும் யானைகள் கூட்டம் கூட்டமாகக் காணப்படுகின்றன. யானைகள் ஒரு வித்தியாசமான தோற்றத்தையும் அத்துடன் பலத்தையும் கொண்டிருக்கின்றது. யால என்ற இடத்திலிருந்து பெறப்பட்ட தகவலின்படி, அங்கு உலகின் வயது கூடிய யானைகள் எல்லாம் காணப்படுவதாகக் கருதப்படுகிறது. காட்டை விட்டு, வெப்ப காலங்களில் ஊர் மனைகளை நோக்கிப் படையெடுக்கத் தொடங்குகிறது. அதிலும் குளங்களுக்கு அருகிலுள்ள பிரதேசங்கள் யானைகளால் சூழப்பட்டுக் காணப்படுகின்றன. இதன் காரணமாக பெருமளவு விளைநிலங்கள் யானைகளால் வருடா வருடம் அழிக்கப்படுகின்றன. இலங்கையில் காணப்படுகின்ற பௌத்த சமயத்தவர்கள் யானைகளைத் தெய்வத்துக்குச் சமமாகப் பார்க்கிறார்கள். அவர்கள் இதனை புத்த சமயத்தில் ஓர் பிரிவாகவே கருதுகிறார்கள். பௌத்த சமயத்தவர்கள் யானைகளை வேட்டையாடுவதை எவ்வளவு தூரம் குறைக்க முடியுமோ, அவ்வளவு தூரம் குறைக்கின்றார்கள். ஆனாலும் இரத்தினபுரி என்ற இடத்தில் யானைகளை வேட்டையாடுவதைத் தடைசெய்யும் தீர்மானம் ஒன்றை புத்த சமயத்தவர் அனைவரும் சேர்ந்து எடுத்திருக்கிறார்கள்.



# திரை விமர்சனம்

## 7 G ரெயின்போ காலனி

இயக்குநர் செல்வராகவனுடைய இயக்கத்தில் வெளிவந்திருக்கின்ற படம் இது.

முரட்டுத்தனமான நாயகன் கதிர் வசிக்கும் அடுக்கு மாடிக்கட்டடத்துக்கு அனிதாவின் குடும்பம் குடிவருகிறது. கதிர் அனிதாவைக் காதலிக்கத் தொடங்குகின்றான். இந்தக் காதல் பிறக்கும் ஒவ்வொரு காட்சியையும் இயக்குநர் மிகவும் தத்ரூபமாகக் காட்டுகின்றார்.




இதேவேளை— அனிதா வேறொருவருக்கு நிச்சயம் செய்யப்படுகின்றார். ஒரு கட்டத்தில் அனிதா கதிரை வெறுக்கின்றார்.

அந்தக்காலனியில் நடைபெறுகின்ற ஒவ்வொரு சம்பவங்களையும் பார்க்கும் பொழுது மிகவும் சுவாரசியமாக இருக்கிறது. கதிர் கடைசியில் அனிதாவைப் பார்த்து நண்பர்களாக இருப்போம் என்று கூறுவது சுவாரசியம். சோனியா அகர்வாலின் நடிப்புப் பிரமாதம்.

இசைவாரிசு யுவன் சங்கர்ராஜாவின் பின்னணி இசை படத்தைத் தூக்கி நிறுத்துகிறது. யுவன் + முத்துக்குமார் கூட்டணிப் பாடல்களைச் சிறப்பாகக் கொடுத்திருக்கிறது. ஒளிப்பதிவாளர் அர்வந் கிருஷ்ணாவின் கமரா பாடல்கள் மட்டுமல்ல, ஒவ்வொரு காட்சிகளூடாக சுவாஷ்போட வைக்கிறது. இயக்குநர் சில இடங்களில் தேவையில்லாத நடனக் காட்சிகளைப் புகுத்தி, நல்ல காலனியைப் பழுதாக்கியிருக்கிறார்.

7G ரெயின்போ காலனி உண்மையில் அழகிய வானவில்.

— ஜேம்ஸ்—

# குறைபாடுடைய இன்ரநெற் அழைப்புகள்


இன்ரநெற் மூலம் தொலைபேசி அழைப்பு எடுப்பது சாதாரண முறையிலும் பார்க்க லாபகரமானது. இதன் மூலம் பெருமளவு பணம் சேமிக்கப்படுகிறது. ஏறக்குறைய 50 ஆயிரம் மக்கள் வரை இன்ரநெற் அழைப்புக்களை எடுப்பவர்கள் என்று செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின்படி, அவர்கள் சாதாரண தொலைபேசி அழைப்புக்களிலும் பார்க்க இன்ரநெற் அழைப்புக்கள் வேகமானவையாக இருக்கின்றன. ஆனாலும் அவற்றிலே சில குறைபாடுகளும் இருக்கத்தான் செய்கின்றன. அதிலும் மிக முக்கியமானது தெளிவின்மையாகும். தற்போது உலகளாவிய ரீதியில் சர்வதேச அழைப்புக்கள் மட்டுமே இன்ரநெற் மூலம் எடுக்கப்படுகின்றன. வெகு விரைவில் அபிவிருத்தியடைந்த சில நாடுகளுடைய உள்ளூர் அழைப்புக்களும் இன்ரநெற் முறை மூலம் எடுக்கக் கூடியதாக இருக்கும் எனவும், தொழில் நுட்பவியலாளர்கள் கூறுகின்றார்கள்.



இன்ரநெற் வந்த புதில் எல்லோரும் அரக்கப்பறக்க அதன் பாவனைக்காக ஏங்கினார்கள். ஆனால் தற்போது இவற்றின் பாவனையைப் பெரும்பாலும் மக்கள் குறைக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். ஏனெனில், இன்ரநெற் தொலைத்தொடர்பு சில வேளைகளில் பல தொல்லைகளையும் கொடுக்கிறது. அதில் மிக முக்கியமாக அழைக்கப்படும் இலக்கம், சில வேளைகளில் மாறி வேறு ஒருவருக்கு இன்ரநெற் மூலம் செல்கிறது. இது சில வேளைகளில் சிக்கல்களைத் தோற்றுவிக்கிறது.


# வெற்றிகரமான ஆராய்ச்சி

அமெரிக்காவின் நாசா ஆய்வு கூடத்தால் சந்திரன் மற்றும் செவ்வாயில் மனிதர்கள் வாழக்கூடிய சூழ்நிலை இருக்கிறதா என்பதை ஆராய்ச்சி செய்வதற்கு அனுப்பட்ட சீ.ஈ.வீ. விண்கலம், தன்னுடைய ஆராய்ச்சிகளை ஏறக்குறைய முடிக்கும் தறுவாயில் உள்ளது. இதனுடைய தொடர்புகள் யாவும் நாசாவுடன் மட்டுமல்ல, அப்பலோ மற்றும் ஜெமினி விண்வெளி ஆய்வு நிறுவனங்களுடனும் தொடர்புகளைப பேணி வருகிறது. இந்த விண்கலத்தைக் கருத்திற்கொண்டே, அமெரிக்க அதிபர் புஷ்ஷினுடைய தேர்தல் பிரசாரம், சந்திரனிலிருந்து செவ்வாய்க்கு எனப் பேசப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்தக் கலம் முற்று முழுதாக கணினி மயப் படுத்தப்பட்ட இயந்திர மனிதர்களால் இயக்கப்படுகிறது. இது சூரிய கலங்களால் இயங்கக் கூடியதாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. சந்திரனிலும் பார்க்க வெப்பம் கூடியது. ஆதலால் செவ்வாய் கிரகத்தில் ஆராய்ச்சி செய்கின்ற விண்கலத்துக்கும், சந்திரனில் ஆராய்ச்சி செய்கின்ற விண்கலத்துக்கும் இடையில் பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆனால், சீ.ஈ.வீ விண்கலம் - இரண்டு இடங்களுக்குப் பொருத்தமானதாகக் காணப்படுகிறது. இது இதனுடைய ஒரு முக்கிய அம்சமாகும். செங்கோள் என்று அழைக்கப்படுகின்ற செவ்வாய் கிரகத்தை எத்தனையே நாடுகள் ஆராய்ந்தாலும், வெற்றிகரமாக ஆராய்ச்சி செய்யும் நாடாக அமெரிக்காவே காணப்படுகிறது.




# போட்டி போடும் கணினிகள்

புதியவகை கணினிகளை உருவாக் குவதில் அமெரிக்காவும், ஜப்பானும் நேரடி மோதலில் இறங்கியுள்ளன. உலகின் முதல் தர கணினி உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றாகிய ஐ.பீ.எம் நிறுவனம் புளூ ஜன் என்ற சிறப்பான கணினி ஒன்றை உருவாக்கியுள் ளது. இது ஜப்பான் நாட்டு ஏக்ஸ் ஸ்மிலேட் டர் கணினிக்குப் போட்டியாக உருவாக்கப்பட்ட ஒன்றாகும். 2005 ஆம் ஆண்டு முதல் ஐந்து சிறந்த கணினிகள் வரிசையில் பின்வருவன இடம் பிடித்திருக்கின்றன. புளூ ஜீன் 1 (அமெரிக்கா) 2 கொலம்பிய (அமெரிக்கா) 3 ஏக்ஸ் ஸ்மிலேட்டர் (ஜப்பான்) 4 மானொஸ்றம் (ஸ்பெயின்) 5 தண்டர் (அமெரிக்கா) உலகளாவிய ரீதியில் 500 சிறந்த கணினிகள் எடுக்கப்பட்டு, அவற்றில் இருந்து பெறப்பட்ட 5 இவையாகும். ஆனாலும், அதியுயர் வெப்ப அதிகரிப்பு — இந்தக் கணினிகளையும் பாதிக்கத்தான் செய்கிறது. நாசா விண்வெளி ஆய்வு கூடத்தில் காணப்படுகின்ற கொலம்பியா என்ற கணினி வெப்பத்தால் பாதிக்கக் கூடியதாக— ஆய்வு கூடத்தில் பல சிக்கல்களை ஏற் படுத்துகிறது. 2002 ஆம் ஆண்டிலிருந்து ஜப்பான் கணினிகள் 3 ஆவது இடத்திலேயே இருக்கின்றன. 1976 ஆம் ஆண்டு அமெரிக்காவில் முதன் முதலில் கிறே — 1 என்ற சிறந்த கணினி கண்டுபிடிக்கப்பட்டது. இதன் மூலம் அமெரிக்கா முதற்தடவையாகக் கணினி உலகில் பிரவேசிக்கிறது.



# செய்மதி மூலம் பறவை ஆராய்ச்சி

செய்மதிகள் மூலம் கடல் வாழ் உயிரினங்கள் இப்பொழுது ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகின்றன. மனிதர்கள் செல்ல முடியாத கடல் பிரதேசங்களில் இந்த செய்மதிகள் தங்களின் நவீன கருவிகள் மூலம் ஆய்வுகளை மேற்கொள்கின்றன. இந்தச் செய்மதிகள் மூலம் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின் பிரகாரம் 300 ஆயிரம் கடல் பறவைகள் வரை வேட்டையாடப்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அரிய இன அல்பா ரோசஸ் என்ற பறவை இனங்களும் இதற்குள் அடங்கும் எனக் கூறப்படுகிறது. இவற்றில் ஏறக்குறைய 100 ஆயிரம் பறவைகள் வரை கொல்லப்பட்டிருப்பதாக செய்மதித் தகவல்கள் தெரிவிக்கின்றன.



கூடுதலாக நியுசிலாந்து. அவுஸ்ரேலியாவின் தென்மேற்குப் பிரதேசம். இந்து சமுத்திரத்தின் தென்மேற்குப் பிரதேசம், அத்திலாந்டிக் சமுத்திரத்தின் தென்மேற்குப் பகுதி மற்றும் பசுபிக் பிராந்தியத்தின் வடக்குப் பகுதி ஆகியவற்றில் பெருமளவான கடல் பறவைகள் உலாவருகின்றன. இவற்றிலே காணப்படுகின்ற சில பறவைகள் ஒருநாளுக்கு 1800 கிலோமீற்றர் தூரம் பயணம் செய் கின்றன. அவற்றினுடைய தொடர் பயணத்தின்போது. 42 நாட்களில் பூமியைச் சுற்றி வரக்கூடிய நிலையும் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.





# துருவம் தரும் காலநிலை மாற்றம்

துருவப் பகுதியில் காணப்படுகின்ற மக்கள் காலநிலை மாற்றங்களால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். கூடுதலாக ஆர்ட்டிக் துருவப் பகுதியில் வாழுகின்ற மக்களும், விலங்குகளும் வருடாவருடம் வித்தியாசமான காலநிலை மாற்றங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. அத்துடன் ஒருவருடம் ஏற்படுகின்ற காலநிலை மாற்றங்கள், அடுத்தவருடம் அங்கே ஏற்படுவதில்லை எனக் கூறப்படுகிறது. இது துருவப் பகுதி யின் தளம்புகின்ற காலநிலை மாற்றங்களை எடுத் துக் காட்டுகிறது என, அங்கே இருந்துவரும் தக வல்கள் தெரிவிக்கின்றன. ஏறக்குறைய 300 விஞ்ஞானிகள்வரை கூட்டாக இணைந்து, இந்தக் காலநிலை மாற்றங்களை ஆராய்ந்து, சில முடிவுகளை எடுத்துள்ளனர். அதிலே மிக முக்கியமான முடிவாக அதிகமாகக் காணப்படும் பனிக்கட்டிகள் கூறப்பட்டிருக்கின்றன. அதிலும் பனிக்கட்டிகள் உருகும் பொழுது விதம் விதமான காலநிலை மாற்றங்களை உருவாக்குகின்றன எனக் கூறப்படுகிறது. ஐஸ் லாந்து என்று சொல்லப்படுகின்ற இடத்தில் எதிர் பார்க்கமுடியாத அளவுக்குக் காலநிலை மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அடுத்த நூறு வருடங்களில் ஏற்படக்கூடிய எல்லாக் காலநிலை மாற்றங்களும் தற்போதிருந்தே தொடங்கியுள்ளதாக விஞ்ஞானிகளும், ஆய்வாளர்களும் கருதுகிறார் கள். துருவப் பகுதியில் ஏற்படும் தாக்கம் பூமியின் மற்றைய பகுதிக்கும் பரவுமென அவர்கள் அச்சம் தெரிவிக்கிறார்கள்.

## முன்பள்ளி அமைப்பது தொடர்பான கலந்துரையாடல்

வவுனியா வடக்கு பெரியமடுக் கிராமத்தில், புதிய முன்பள்ளி அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வு கடந்த சனிக்கிழமை மாலை 4 மணிக்கு - வவுனியா பொது நோக்கு மண்டபத்தில், தமிழா புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் தாசன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் புதிய முன்பள்ளி அமைப்பது தொடர்பாகவும், முன்பள்ளிக்கான ஆசிரியரை நியமிப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இதில் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர், பணியாளர்கள், கிராம அமைப்பு பிரதிநிதிகள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# வெள்ளத்தால் பளைப் பிரதேச மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலையில் தஞ்சம்

பளைப் பிரதேசத்தில் பெய்து வரும் கடும் மழையால், நூறு குடும்பங்கள் வரை இடம் பெயர்ந்து பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளன.

இந்தப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்து, குடிசைகள் அமைத்து வாழ்ந்த 100 குடும்பங்களைச் சேர்ந்த 600 இற்கும் மேற்பட்டோர் தமது குடிசைகளில் தங்கியிருக்க முடியாததையடுத்து, குடிசைகளை விட்டு வெளியேறிப் பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

இயக்கச்சி, மாசார், சோரன்பற்று, புலோப்பளை மேற்கு, இத்தாவில், சங்கத்தார்வயல், கோவில்வயல் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்களே இவ்வாறு இடம்பெயர்ந்துள்ளனர்.

கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் தொடர்மழை - நேற்றுமுன்தினம் மிகக் கடுமையாகப் பெய்துள்ளது. இந்த மழை மேலும் தொடருமானால், இந்தப் பிரதேசத்தின் வண்ணாங்கேணி, தம்பகாமம் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்களும் இடம்பெயரவேண்டிய நிலை ஏற்படலாம் என மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பெரும்பாலான மக்களின் நிரந்தர வீடுகள் - இராணுவத்தினரின் படை நடவடிக்கை காரணமாக முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

அதனால் இங்கு மீளக்குடியமர்ந்த மக்கள் சிறு குடிசைகளை அமைத்தே வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.




## விவசாயிகளுக்கு கடன் வழங்கல்

(வவுனியா)

வவுனியா வடக்கு விவசாயிகளுக்கான விவசாய கடன் வழங்கப்பட்டது. தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் வவுனியா வடக்கு சிக்கன கடனுதவி சங்கத்தின் நிதியுதவியுடன் இந்தக் கடன் வழங்கப்பட்டது.

இந்தக் கடனுதவி -நேற்றுமுன்தினம் 35 விவசாயிகளுக்கு, 2005 ஆம் ஆண்டுக்கான காலபோக வீவசாயக் கடனாக - தலா ரூபா 10 ஆயிரம் வழங்கப்பட்டது.

# மாந்தை - சிராட்டிக்குள மக்கள் அடிப்படை வசதிகளற்ற நிலையில்!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - சிராட்டிக்குளம் பிரதேச மக்கள் -அடிப்படை வசதிகள் இன்றி மிக நீண்டகாலமாக வாழ்நது வருகின்றனர்.

மாந்தை உதவி அரச அதிபர் பிரிவின் கீழுள்ள சிராட்டிக்குளம் கிராமத்தில், 65 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அடிப்படை வசதிகள் இன்றிப் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்தக் கிராமத்தின் பிரதான வீதி - கடந்த 25 வருடங்களுக்கு மேலாகப் புனரமைப்புச் செய்யப்படாத நிலையில், குன்றும் குழியுமாகப் படுமோசமான நிலையில் சிதைவடைந்து காணப்படுகிறது.

இதனால், இந்தப் பிரதேச மக்கள் எந்தவொரு வாகனத்திலும் இந்தப் பாதையூடாகப் பிரயாணம் செய்ய முடியாத நிலை காணப்படுகிறது.

மேலும் இந்த வீதியைக் குறுக்கறுத்துச் செல்லும் பறங்கியாற்றினூடான பாலம், மிக மோசமாகப் பழுதடைந்துள்ளது.

இதனால், இந்தப் பாலத்தினூடான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுளளது. தற்போது மழைகாலம் ஆகையால், ஆறு பெருக்கெடுத்துப் பாய்கிறது. இதனால் மக்கள் பயணிக்க முடியாதநிலை காணப்படுகிறது.

இவைதவிர, இந்தப் பகுதி மக்கள் தமது அடிப்படை வசதிகளைப் பெறுவதாயினும், சுமார் 25 கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் சென்றே தமது தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும். இதனால் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

## புவியியல் பாட நில அளவை தொடர்பான வதிவிடக் கருத்தரங்கு

க.பொ.த.உயர்தரப் புவியியல் பாட நில அளவை தொடர்பான வதிவிடக் கருத்தரங்கு, நேற்று ஆரம்பமாகியது.

இந்தக் கருத்தரங்கு நாளை வரை, கிளிநொச்சி கல்வி வலய வள நிலையதததில் காலை 9 மணியிலிருந்து இரவு 8 மணி வரை நடைபெறும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயங்களையும் - மருதங்கேணி கல்விக் கோட்டத்தையும் சேர்ந்த க.பொ.த உயர்தர வகுப்பு புவியியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களை, இந்த வதிவிடக் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் கேட்டுள்ளார். (122)

## புதிய அணைக்கட்டு அமைக்கப்பட்டுள்ளது

(வவுனியா)

வவுனியா சேமமடு குளத்துக்கும், முதலியாற்றுக்கும் இடையிலான அணைக்கட்டு அமைக்கப்பட்டுள்ளது. இந்த அணைக்கட்டு ஒன்றரைக் கிலோமீற்றர் நீளமானது. இதனால் இந்தக் குளத்தில் அதிகளவு நீர் பெற்றுக்கொள்ளப்படுகிறது.

இந்தக் குளத்தின்கீழ் 600 ஏக்கர் வயல்கள் உள்ளன. இங்கு 500 பயனாளிகள் பயன் பெறு கின்றனர் என்பது குறிப்பிடத்தக் கது.

எதிர்வரும் காலங்களில் ஏற்படும் நீர்ப்பற்றாக்குறையைத் தீர்த்து வைக்க இந்தத் திட்டம் மிகவும் உதவியளித்துள்ளது. இந்தத் திட்ட வேலையை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - டி.ஆர்.சி நிறுவனத்தின் நிதியுதவியுடனும், உலக உணவுத் திட்டத்தின் பங்களிப்புடனும் மேற்கொண்டுள்ளது.

# வைத்தியசாலையின் வளர்ச்சிக்கு பிரதேச மக்களின் பங்களிப்பு அவசியம்

## வைத்திய கலாநிதி தெய்வேந்திரன்

ஒரு வைத்தியசாலையின் வளர்ச்சிக்கு, அந்தப் பிரதேச மக்களின் பங்களிப்பு மிக அவசியமானதாகும். மக்களின் ஒத்துழைப்பு இருக்கும் பட்சத்திலேயே, வைத்தியசாலை அபிவிருத்தியடையமுடியும்.

இவ்வாறு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி தெய்வேந்திரன் - மருதங்கேணிக் கிராம வைத்தியசாலையின் திறப்புவிழா வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

இந்த வைத்தியசாலை புனரமைக்கப்பட்டுத் திறக்கப்பட்டதன் மூலம், இந்தப் பிரதேச மக்கள் - சுகாதார வசதிகளைப் பெறுவதற்குரிய வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

நிகொட் நிறுவனத்தின் உதவியுடன், சகல வசதிகளுடனும் இந்த வைத்தியசாலை புனரமைக்கப்பட்டுள்ளது. இந்த வைத்தியசாலைக்குரிய வைத்தியர்களையும், ஊழியர்களையும் நியமிப்பதற்கு மிக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

மருதங்கேணி வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தமிழீழ தேசியக் கொடியை வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியற் பொறுப்பாளர் தீபன் ஏற்றிவைத்தார்.

வைத்தியசாலையின் பெயர்ப் பலகையை, சுகாதார சேவைகள் பணிமனையைச் சேர்ந்த நிர்வாக அலுவலர் சிவலிங்கம் திரை நீக்கம் செய்துவைத்தார்.

வைத்தியசாலையின் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி தெய்வேந்திரன் திறந்து வைத்தார்.

ஆண்களுக்கான விடுதியை நிகொட் நிறுவன உதவித்திட்டப் பணிப்பாளர் நவரட்ணராசா திறந்து வைத்தார். பெண் நோயாளர் தங்கும் விடுதியை - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் ஜெயசீலன் திறந்து வைத்தார்.

மகப்பேற்று விடுதியை வடமராட்சி கிழக்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் தீபன் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வின் வரவேற்புரையைக் கிராம அலுவலர் வ.தவராசா நிகழ்த்தினார். சிறப்புரைகளை நிகொட் நிறுவனத்தைச் சேர்ந்த நவரட்ணராசா, முன்னாள் உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை, பருத்தித்துறைப் பிரதேச சபைச் செயலாளர் சி.பசுபதி, வடமராட்சி கிழக்கு புனரமைப்புக் குழுத் தலைவர் சி. பொன்னம்பலம் ஆகியோர் நிகழ்த்தினர். (122)

## சிறிய குளங்கள் உடைப்பெடுக்கும் நிலையில்

முல்லைத்தீவுப் பிரதேசத்தில் உள்ள சிறிய குளங்கள் உடைப்பெடுக்கும் நிலையில் உள்ள அதேவேளை, பெரிய குளங்களின் நீர் மட்டமும் தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

முத்தையன்கட்டுக் குளத்தின் நீர் மட்டம் - 18 அடி ஆக உயர்ந்துள்ளது. தண்ணிமுறிப்புக்குளம் 19 அடி 7 அங்குலமாகவும், கணுக்கேணிக் குளம் 12 அடி 2 அங்குலமாகவும், விசுவ மடுக்குளம் 18 அடி 7 அங்குலமாகவும், உடையார் கட்டுக்குளம் 12 அடி 11 அங்குலமாகவும் நீர் மட்டம் உயர்ந்துள்ளது.

# பெரியமடு - பாலம்பிட்டி வீதி புனரமைக்கப்படாத நிலையில்

(மன்னார்)

மன்னார் பெரியமடுவுக்கும். பாலம்பிட்டிக்கும் இடையிலான சுமார் 15 கிலோ மீற்றர் தூர வீதி புனரமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது.

இந்த வீதி - பத்து ஆண்டுகளுக்கு முன்பு புனரமைப்பதற்காக கிரவல் மண் போடப்பட்டது. அதன் பின்னர் இதுவரைக்கும் இந்த வீதி புனரமைக்கப்படவில்லை. இதனால் தற்போது இந்த வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. இதனைப் பலரிடம் கூறியும், எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

தற்போது இந்த வீதியூடாகப் பயணம் செய்யும் மக்கள் பெரும் சிரமப்பட்டு வருகிறார்கள் என இந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

## கிளிநொச்சி கூட்டுறவுச் சங்கங்களில் அரிசிக்கு தட்டுப்பாடு

கிளிநொச்சிப் பகுதியிலுள்ள கூட்டுறவுச்சங்கக் கிளைகளில் அரிசிக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

தற்போது வழங்கப்பட்டுவரும் கடந்த மாதத்துக்குரிய உலர் உணவுப் பொருட்களில்- அரிசி வழங்கப்படாமல், ஏனைய பொருட்கள் மட்டும் வழங்கப்பட்டது. ஆனால், இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் அரிசிக்குரிய சிட்டையே நிவாரணம் பெறுவோருக்கு வழங்கப்படுகிறது.

இதனால் இந்தப் பகுதி மக்கள் கடந்த 15 நாட்களாகச் சிட்டையை வைத்துக்கொண்டு, அரிசியைப் பெறுவதற்காகக் கூட்டுறவுச்சங்கக் கிளைகளில் காத்திருந்து, ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதை அவதானிக்கமுடிகிறது.

இது தொடர்பாகக் கூட்டுறவுச் சங்கக் கிளை முகாமையாளர்களிடம் கேட்டபோது, கூட்டுறவு ஒன்றியத்தினரே அரிசியைக் கிளைகளுக்கு வழங்கவேண்டும். கூட்டுறவு அரிசி ஆலை பழுதடைந்துள்ளது. இதனால் அரிசியை வழங்க முடியாதுள்ளதாகக் கூட்டுறவு ஒன்றியம் தெரிவித்துள்ளது என அவர் தெரிவித்தார்.

# பூந்தோட்டம் குளக்கட்டுப் பிரதேசத்தில் பொலிஸாரால் புதிய முகாம் அமைப்பு

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் குளக்கட்டுப் பகுதியில், பொலிஸார் நேற்றுமுன்தினம் புதிய முகாம் ஒன்றை அமைதது வருவது குறித்து பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர்.

வவுனியா - பூந்தோட்டம் பகுதியில், ஒரு கிலோமீற்றருக்குள் பொலிஸ் காவலரணும், பூந்தோட்டம் மின் பிறப்பாக்கி முன்பு மற்றைய பொலிஸ் காவலரணும், மக்கள் குடியிருப்புக்கு அண்மையில் இராணுவ முகாம் ஒன்றும் அமைந்துள்ள நிலையில், இந்தப் பொலிஸ் காவலரண் அமைக்கப்பட்டு வருவதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

இதேசமயம் வவுனியா நகரத்தில் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்தின் பின்புறம் - புல்டோசர் கொண்டு அழிக்கப்பட்டு, முகாம் அமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியில் வீதி ஒழுங்கு குறித்த கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை 11.30 மணியளவில் தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவால், வீதி ஒழுங்கு பற்றிய கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வீதி விதிமுறைகள் தொடர்பாகவும், வீதி விபத்துக்களைத் தடுப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

இந்த நிகழ்வு கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கருத்துரைகளை வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவகுமாரன், துணைப் பொறுப்பாளர் ந.ஜீவானந்தன் நிகழ்த்தினர்.

இதில் பாதசாரிகள், சைக்கிளில் செல்வோர், வாகனச் சாரதிகளுக்கு- வீதி ஒழுங்கு விதிகளைப் பின்பற்றுவது தொடர்பாக அறிவுறுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் 75 இற்கும் மேற்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் கலந்துகொண்டனர்.

# பளைப் பிரதேச மக்களுக்கு சமைத்த உணவு வழங்கல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது பெய்து வரும் தொடர் மழை காரணமாக, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பளைப் பிரதேச மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால், நாள்தோறும் சமைத்த உணவு வழங்கப்பட்டு வருகிறது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் இயக்கச்சி, கோவில் வயல், புலோப்பளை கிழக்கு, புலோப்பளை மேற்கு, மாசார், சோரன் பற்று, தம்பகாமம், இத்தாவில், அரசர் கேணி, கச்சாய் வெளி, முகாவில், அல்லிப்பளை, தர்மக்கேணி பிரதேச மக்களும் - அத்துடன் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் உமையாள்புரம் மக்களும் வெள்ளத்தால் பாதிககப்பட்டுள்ளனர்.

இவர்களில் இயக்கச்சி, கோவில் வயல், குமாரபுரம் ஆகிய பாடசாலைகளில் 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்கவைக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - சமைத்த உணவுகளை வழங்கி வருகிறது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*கொலைமேற்கொண் டாரின் கொடிதே அலைமேற்கொண்டு
அல்லவை செய்துஒழுகும் வேந்து*

திருக்குறள்

## நமது நோக்கு

# கொதிநிலைக்கே இட்டுச் செல்லும்!

கொடிகாமத்தில் நேற்றுமுன்தினம் நடந்த விபத்துச் சம்பவத்தை அடுத்து – இடம்பெற்ற சம்பவங்கள் தமிழ்மக்கள் மீதான படையினரின் அடாவடித்தனப்போக்கு எந்த மாற்றமும் இன்றித் தொடர்வதையே எடுத்துக்காட்டியிருக்கின்றன.

படையினரின் பவுசர் மோதி இளைஞர் ஒருவர் உயிரிழந்த பின்னர் – சம்பவ இடத்துக்கு பொதுமக்களை அனுமதிக்காத படையினர், நீதிவான் விசாரணைக்கு முன்னதாக சடலத்தை அகற்ற முயன்றதே பொதுமக்கள் ஆத்திரம் கொள்ளக் காரணமாக அமைந்தது.

ஏற்கனவே இத்தகைய சம்பவங்கள் குடாநாட்டில் இடம் பெற்றிருந்தன. யாழ்ப்பாணம் மடத்தடி மற்றும் அரியாலை மாம்பழம் சந்தி ஆகிய பகுதிகளில் இராணுவ வாகனங்கள் மோதி பொதுமக்கள் உயிரிழப்புக்களைச் சந்தித்ததை யடுத்து – முறுகல்நிலை ஏற்பட்டிருந்தது.

இந்த இரண்டு சம்பவங்களின்போதும் விபத்து நடந்த இடத்திலிருந்து தடயங்களை அப்புறப்படுத்த முற்பட்டபோதே பொதுமக்கள் கிளர்ந்தெழுந்து எதிர்ப்புத் தெரிவித்து கல் வீச்சுக்களில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தச் சம்பவங்களின் பின்னர் – விபத்து நடந்த இடத்திலிருந்து உயிரிழந்தவரின் சடலம் நீதிவான் விசாரணைக்கு முன்னர் அகற்றப்படக்கூடாது என்று யாழ்ப்பாணம் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே இத்தகைய நீதிமன்ற உத்தரவுகள் இருந்த நிலையில்தான் கொடிகாமத்தில் பவுசர் மோதி உயிரிழந்தவரின் சடலத்தை அகற்ற படையினர் முனைந்திருக்கின்றனர்.

இதன்விளைவாக பொதுமக்கள் ஆத்திரம்கொண்டு கல்வீச்சில் இறங்க, படையினரும் பொலிஸாரும் கண்ணீர் புகைக் குண்டு வீச்சு, தடியடி என்று தமது வழக்கமான காட்டுமிராண்டித்தனத்தை பொதுமக்கள் மீது வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

படையினருக்கும் பொதுமக் களுக்கும் இடையிலான உறவுநிலை எந்தளவுக்கு நீறுபூத்த நெருப்பாக இருந்து கொண்டிருக்கின்றதென்பதை இந்தச் சம்பவங்கள் வெளிப்படுத்தியிருக்கின்றன. அதேசமயம் படையினர் மற்றும் பொலிஸாரின் மனோநிலை – எத்தகைய சமாதான சூழல் வந்தாலும் மாறப்போவதில்லை என்பதையும் மீளவும் எடுத்துக்காட்டி யிருக்கிறது.

இந்தச் சம்பவத்தின்போது அப்பகுதியில் செய்திச் சேகரிப்பில் ஈடுபட்ட செய்தியாளர்கள் சிலர் தாக்கப்பட்டு அவர்களின் புகைப்படக் கருவிகள் பறிமுதல் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே மடத்தடிச் சம்பவத்தின்போதும் மாம்பழம் சந்திச் சம்பவத்தின்போதும் இதேபோன்று செய்தியாளர்கள் தாக்கப்பட்டதுடன் அவர்களின் புகைப்படக் கருவிகள் பறிக்கப்பட்டன.

இதிலிருந்து இத்தகைய நிகழ்வுகள் தொடர்பான தகவல்கள் வெளிவருவதைத் தடுக்க முயற்சிகள் எடுக்கப் படுகின்றன என்பது மீண்டும் வெளிப்பட்டிருக்கிறது.

செய்தியாளர்கள் மீதான வன்முறை இன்று நேற்று ஆரம்பித்ததல்ல. குடாநாடு படையினர் வசம் வந்த பின்னர் நிமலராஜன் படுகொலை முதல் செய்தியாளர்கள் அச்சுறுத்தப்பட்ட எத்தனையோ சம்பவங்கள் நிகழ்ந்துவிட்டன.

ஆனாலும் தமக்கு எதிராகப் படையினர் நடந்துகொள்ளும்போது இயல்பாகவே கிளர்தெழும் மக்களும் அத்தகைய சம்பவங்களை சர்வதேசத்துக்கு வெளிச்சம் போட்டுக்காட்டும் செய்தியாளர்களும் ஓய்ந்துவிடப்போவதில்லை என்பபது இன்னொரு தடவை உரத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

குடாநாட்டைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் படையினர் தாம் எதையும் செய்துவிடலாம் என்ற நினைப்பில்தான் நடந்துகொள்ள முற்பட்டிருக்கிறார்கள். இத்தகைய நிலையை குடாநாட்டு மக்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்ற செய்தி மீளவும் படைத்தரப்புக்கு மக்களால் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது.

ஏற்கனவே இத்தகைய சம்பவங்கள் ஏற்பட்டதற்கான காரணங்கள் , அது தொடர்பாக நீதிமன்றம் விடுத்த உத்தரவு என்பவற்றைக் கருத்தில் எடுக்காமல் படைத்தரப்பு நடந்துகொள்ள முற்பட்டிருப்பதானது – எதிர்காலத்திலும் இத்தகைய சம்பவங்கள் தொடராதெ ன்பதை உத்தரவாதப் படுத்தமுடியாத நிலையைத் தோற்றுவித்திருக்கிறது.

விபத்துக்கள் வழக்கமாக இடம்பெறுவதாகக் கொண்டாலும் – அத்தகைய சம்பவங்களில்போது மக்களின் மனோநிலையைப் புரிந்துகொள்ளாமல் படையினர் நடந்து கொண்டுவிட்டு – அதன் விளைவாக மக்கள் கிளர்ந்தெழத் தொடங்கியதும் தமது மிலேச்சத்தனத்தைக் கட்டவிழ்த்துவிட்டதும் வலுவான கண்டனங்களுக்குள்ளாகியிருக்கிறது.

இந்த விடயத்தில் படைத்தரப்பு தமது நிலைப்பாட்டிலிருந்து மாறாதிருக்குமேயானால் குடாநாட்டு மக்களின் வெறுப்பும் கோபமும் அவர்கள் மீது மீளவும் வெளிப்படுத்தப்படும் என்பதில் ஐயமில்லை.

சமாதானச் சூழலானாலும் மக்கள் மீது காட்டுமிராண்டித் தனத்தை வெளிப்படுத்தும் படைத்தரப்பின் நிலைப்பாடும் செய்தியாளர்கள் மீதான வன்முறையும் தொடர்ந்து நடைபெறுமானால் அது குடாநாட்டை ஒரு கொதிநிலைக்கே கொண்டுசெல்லும் என்பதில் சந்தேகமில்லை.

## நாடும் நடப்பும்




# தமிழீழ தேசியத் தலைவருக்கு வெற்றிக் கேடயமும் வாழ்த்தும்

### யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் வழங்கவுள்ளனர்



(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை நினைவு கூரப்படவுள்ள தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு யாழ்.பல்கலைகழக சமூகத்தினரால், பல்கலைக்கழகத்தில் மாவீரர் நினைவுப்பந்தல் அமைக்கப்பட்டு, அதில் மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு, 'மாவீரர் தினம்' மிகவும் எழுச்சி பூர்வமாக உணர்வுடன் அனுஷடிக்கப்படவுள்ளது.

மாவீரர் நினைவாக 25,26,27 ஆகிய மூன்று தினங்களும் விசேட நிகழ்வுகளும் யாழ்.பல்கலைக்கழத்தில் நடைபெறவுள்ளன.

இதேவேளை, தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் 50 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு, 26 ஆம் திகதி காலை 7 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரர் ஆலயத்தில் - தமிழீழ தேசியத் தலைவருக்கும், போராளிகளுக்கும் நல்லாசி வேண்டி விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறவுள்ளன.

அத்துடன் பல்கலைக்கழக மாவணர் ஒன்றியத்தால் - தமிழீழ தேசியத் தலைவருக்கான வெற்றிக் கேடயமும், வாழ்த்துச் செய்தியும் - தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஊடாக, தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன. (63)

# கூட்டுறவுச் சங்க தலைமையகத்தில் கூட்டுறவு நகர் பல்பொருள் அங்காடி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைமையகத்தில், 'கூட்டுறவு நகர்' என்ற பல்பொருள் அங்காடி நிலையத்தை ஆரம்பிக்கவுள்ளது. பல இலட்சம் ரூபாய் முதலீட்டில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தக் கூட்டுறவு நகரில், பொது மக்கள் சகல விதமான பொருட்களையும் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த நிலையத்தில் கூட்டுறவில் உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் காட்சிப்படுத்தி, சந்தைப்படுத்தப்படும். இந்தக் கூட்டுறவு நகரில் உதிரிப்பாகம், மருந்தகம், நவீன பதிப்பகம், தொலைத் தொடர்புகள், மின்னஞ்சல், தொலைநகல், கவரிடுதல் போன்ற சேவைகளும் இடம்பெறும் எனவும், சங்கத் தலைவர் சொலமன் சூ.சிறில் தெரிவித்தார்.

இவை காலக் கிரமத்தில் சங்க எல்லைப் பரப்பின் வலயர்தியாக, அமைக்கப்படவிருப்பதாகவும் தெரிவித்தார். (63)

## நெடுந்தீவில் தையல் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைகளத்தின் அனுசரணையுடன் - நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 2005 ஆம் ஆண்டு ஆரம்பமாகவுள்ள தையல் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஒருவருட காலத்தைக் கொண்ட இந்தப் பயிற்சிநெறியில், 18 வயதைப் பூர்த்திசெய்து, க.பொ.த. (சா/த) வரை கல்வி கற்றுள்ளவர்கள் இணைந்து கொள்ளலாம்.

பயிற்சிக்கால ஊக்குவிப்புப் படியாக நாளொன்றுக்கு 50 ரூபா வழங்கப்படவுள்ளதுடன், ஏற்கனவே இந்த நிலையத்தில் பயிற்சிபெற்றவர்கள் விண்ணப்பிக்கமுடியாது. விண்ணப் பங்களை அந்தப்பகுதி கிராமஅலுவலர்களிடம் பெற்று எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்கவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (113)

## ஓய்வூதியக் கொடுப்பனவு வழிகாட்டிக் கையேடு!

(கொழும்பு)

ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்குவதில் காணப்படுகின்ற முரண்பாடுகளை நிவர்த்திசெய்யும் பொருட்டு, சிக்கல்கள் ஏற்படுவதை நிவர்த்தி செய்யும் முகமாக ஓய்வூதியக் கொடுப்பனவு சிக்கல்களைத் தீர்க்க, நாட்டிலுள்ள பிரதேச செயலகப் பணியாளர்களுக்கு வழிகாட்டிக் கையேடு ஒன்று வழங்கப்படவுள்ளது.

ஓய்வூதியப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கக்கூடிய விபரங்கள் அடங்கிய வழிகாட்டிப் புத்தகம் ஒன்று, பிரதேச செயலக ஊழியர்களுக்கு விரைவில் வழங்கப்படவுள்ளதாகப் பொது நிர்வாக அமைச்சின் மேலதிக செயலாளர் ஜீ.ஹெட்டி ஆராச்சி தெரிவித்தார். (122)

# பொன்னாலை சனசமூக நிலையத்தை மீண்டும் இயக்குமாறு கோரிக்கை!

பொன்னாலையில் சில வருடமாக இயங்கிவந்த சனசமூக நிலையம் - தற்போது மாடுகட்டும் தொழுவமாக மாறியுள்ளது.

1995ஆம் ஆண்டு இடம்பெயர்வுக்கு முன்னர் பொன்னாலைக் கிராமத்தில் நிரந்தரக் கட்டடத்தில் பல வருடங்களாக இந்தச் சனசமூக நிலையம் இயங்கி வந்தது.

இடம்பெயர்வுக்குப் பின்னர் அந்தக் கட்டடம் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளமையால், ஊர்மக்கள் சிலர் ஒன்றுகூடி வேறொரு இடத்தில், தனிப்பட்ட ஒருவரின் காணியில் கொட்டில் அமைத்து, சனசமூகத்தை ஆரம்பித்து ஒன்றரை வருடங்களுக்கு மேலாக நடத்தி வந்தனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர், இந்தச் சனசமூக நிலைய நிர்வாகத்தினருக்கும், இளைஞர் குழுவொன்றுக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட பகை காரணமாக, தற்காலிகமாக சனசமூக நிலையம் இயங்கிவந்த காணியைக் காணி உரிமையாளர் மீளப்பெற்று விட்டார் என்று கூறி, தனிப்பட்ட ஒரு சிலரால் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் நிர்வாக உறுப்பினர்களுககுத் தெரியாமல் தன்னிச்சையாக இந்தச்சனசமூக நிலையம் மூடப்பட்டுவிட்டது.

சனசமூக நிலையம் மூடப்பட்டதும் சில வாரங்களாக, குறிப்பிட்ட இந்தக் கொட்டிலுக்குள், மாடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மக்களின் அறிவுப்பசியைத் தீர்க்கும் சனசமூக நிலையத்துக்கா இந்தக் கதி? என்று ஊர்மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இந்த விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு, அறிவாலயமாகிய இந்தச் சனசமூக நிலையத்தைக் குறிப்பிட்ட இடத்திலோ அல்லது வேறொரு இடத்திலோ அமைத்துத்தர ஆவன செய்யுமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (207)

வாரநோக்கு..

- யாழவன்

# அடக்குமுறைக்கு எதிராக போராடும் இனத்தை அடக்க முயலும் வல்லாதிக்க சக்திகள்

கடந்த வாரம், விடுதலை விரும்பிகளுக்கு வேதனைமிக்க வாரமாக முடிந்திருக்கிறது. பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவராக இருந்து, அந்த நாட்டு மக்களின் சுதந்திரத்துக்காக இறுதி வரை போராடிய விடுதலை வீரர் யசீர் அரபாத்தின் இறப்பு பலரையும் ஆழ்ந்த கவலைக்கு இட்டுச் சென்றுள்ளது. அதனைவிட அவரது இறப்புக்குப் பின்னர் சில ஏகாதிபத்திய வாதிகள் வெளியிட்டுவரும் கருத்துக்கள் இன்னும் ஆழமான வேதனையை ஏற்படுத்துவதாகவுள்ளன.

பலஸ்தீன மக்கள் தமது சுதந்திரத்துக்கான போராட்ட வாழ்வின் முக்கிய கட்டத்தலேயுள்ள போது, தமது தலைவரை இழந்து நிற்கின்றார்கள். அவரது இழப்பு அவரை நம்பியிருந்தவர்களுக்கு ஈடு செய்யப்பட முடியாததொன்றாக உள்ள அந்த வேளை, சில விசமிகளுக்கு விருந்தாகவும் அமைந்துள்ளது. உலகில் எங்கே அடக்கப்பட்ட இனமொன்று அடக்கு முறைக்கு எதிராகப் போராடுகிறதோ, அந்தப் போராட்டத்தை அடக்க வேண்டுமெனத் துடியாய் துடிக்கின்ற வல்லாதிக்க சக்திகளுக்கு அரபாத்தின் மறைவு அவலாகக் கிடைத்துள்ளது. வெறு வாய்



சப்பியவர்களுக்கு அவல் கிடைத்தால் சொல்லவும் வேண்டுமா? அவர்கள் பாடு வெகு கொண்டாட்டம் தானே!

இது போன்றே அரபாத்தின் மறைவை அமெரிக்கா, பிரிட்டன், இஸ்ரேல் உள்ளிட்ட சில நாடுகளும் அந்த நாடுகளின் முக்கிய தலைவர்களும் எடுத்துக் கொண்டுள்ளார்கள். அரபாத் இருக்கும் வரை சமாதான முயற்சிகளிலாயினும் சரி, பொருளாதார ரீதியாகவும் சரி, போரியல் ரீதியாகவும் சரி தமது அடக்கியாளும் திறனை பலஸ்தீனம் மீது பிரயோகிக்க முடியாது தவித்தவர்கள் அரபாத்தின் மரணத்தையிட்டு சந்தோசம் கொண்டிருக்கின்றனர். இதனாலேயே அரபாத்தின் மறைவு மத்திய கிழக்கிலே அமைதியைத் தோற்றுவிக்கும் எனவும், இஸ்ரேல் - பலஸ்தீன சமாதான முயற்சிகளிலே திருப்பத்தை ஏற்படுத்துமென்றெல்லாம் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இதன் மூலமாக இவர்கள் அரபாத்தின் சுயத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு அவருக்கு முகமூடியொன்றை அணிவிக்க முயலுகிறார்கள். அரபாத்தை ஒரு பயங்கரவாதியாகவோ அல்லது தீவிரவாதியாகவோ சித்திரிப்பதிலேயே இந்த நாடுகள் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன. உன்னதமானதொரு விடுதலை வீரனாக உலக மக்களால் மதிக்கப்பட்ட அரபாத்தை அவரது மறைவுக்கு பின்னர் தீவிரவாதியாகக் காட்டுவதற்கு அமெரிக்கா, இஸ்ரேல், பிரிட்டன் கூட்டணி படாதபாடு படுகிறது.

பலஸ்தீன - இஸ்ரேல் இடையேயான சமாதான முயற்சிகளிலே அரபாத்தின் மறைவு முக்கிய நல்ல திருப்பங்களை ஏற்படுத்தும் எனக் கருத்து வெளியிடுவதனூடு, இதுவரை ஏதோ அரபாத் சமாதான முயற்சிகளுக்கு இடையூறாக இருந்தார் என்ற கருத்தைத் தோற்றுவிப்பதற்காகும். இந்தக் கருத்து தோற்றுவிக்கப்பட்டால் தமது உள்ளங்களிலே அரபாத்தை தெய்வமெனப் போற்றும் பலஸ்தீன மக்களை முழு மடையர்களாக்கி அவர்களை விலைக்கு வாங்கிவிட முடியும். அத்துடன் அடுத்து வரும் பலஸ்தீன தலைமையையும் தமக்கு சாதகமாக்கிக் கொண்டால், உலகப் பொலிஸ்காரத் தனத்தை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ள முடியும். இதுவே அமெரிக்கா தலைமையிலான அரசுகளின் கனவாகும். இது விடயத்திலே மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டியவர்கள் பலஸ்தீன மக்களே.

எடுப்பார் கைப்பிள்ளைகளாக மாற்றப்பட்டால் இதுவரை காலமும் உயிரைப் பணயம் வைத்து நகர்த்தி வந்த விடுதலைப் போராட்டம் வீணானதாக மாறும். செத்த பாம்பை அடிப்பதுபோல இறந்து விட்ட அரபாத்தை தொடரும் தாக்கிக் கொள்ள முனையும் ஏகாதிபத்திய வாதிகள் சொல்லுக்குக் கட்டுப்பட நேர்ந்தால் பலஸ்தீன தனி நாடு எனும் கனவு நிறைவேறாமற் போய் விடக்கூடும். எனவே தமது அடுத்த தலைமையைத் தெரிவு செய்வதிலும், விடுதலைப் போராட்டத்தை முன்னோக்கி நகர்த்துவதிலும் பலஸ்தீன மக்கள் முழு மூச்சுடனும், விழிப்புணர்வுடனும் செயற்பட வேண்டும். இல்லையேல் வீணர்களின் கைகளில் அகப்பட்டு மடிய வேண்டிவரும்.

ஒரு விடுதலை வீரன் மரணித்த போது, யுத்த தர்மத்தின்படி அவனுக்கு இறுதி மரியாதை செலுத்த வேண்டியது எதிரியினுடைய கடமையுமாகும். இந்த விடயத்தை உணர்ந்து கொள்ளாத இஸ்ரேல், அரபாத்தின் இறுதிக் கிரியைகளிலே கலந்து கொள்ளாமலும், அனுதாபச் செய்திகளை வெளியிடாமலும் இருந்தமையானது, கேலிக்குரியதாகவே இருக்கின்றது. இதன் மூலம் ஒரு உண்மையை பலஸ்தீன மக்களும், உலகமும் இன்று புரிந்து கொண்டுள்ளனர். அதாவது இதுவரை காலமும் அரபாத் பலஸ்தீன மக்களுக்கு மிக மிக விசுவாசமாகவே செயற்பட்டு வந்தார் என்பதே அந்த உண்மையாகும். இதனாலேயே இஸ்ரேல் அரபாத்தின் சடலத்தின் மீதும் தனது வஞ்சனையைக் காட்டியுள்ளது.

என்று எவனொருவன் தனது எதிரியினாலேயே புகழப்படும் நிலையை அடைகின்றானோ, அன்றே அவன் தனது கொள்கையிலிருந்து பாதை தவறிவிட்டான் என்பதற்கு அறிகுறியாகும். இது சீனத் தலைவர் மாசேதுங்கின் கருத்து. இந்த வகையில் அரபாத்தின் சடலம் கூட இஸ்ரேலினால் பழி தீர்க்கப்பட்டது எனில் அரபாத் உண்மையிலேயொரு விடுதலை வீரராகவே மடிந்துள்ளார். இந்த உண்மையை உலகறியச் செய்தமைக்காக இஸ்ரேலைப் பாராட்ட வேண்டும்.

உலக நடப்பு இவ்வாறு நகர்ந்து கொண்டிருக்க, நம் நாட்டிலும் சில முக்கியமான சம்பவங்கள் கடந்த வாரத்திலே நடைபெற்றுள்ளன. பொலிஸ் சேவை, நீதிமன்றம், சட்டத்துறை என்பன மீதான ஜனாதிபதியின் பாய்ச்சலும், விடுதலைப் புலிகளினால் தமிழீழ சட்டக் கல்லூரியொன்று திறக்கப்பட்டமையும், பாகிஸ்தானிய இரு போர்க்கப்பல்கள் இலங்கை வந்துள்ளமையுமென பரபரப்புக்களைக் கொண்டதாகக் கடந்த வாரம் அமைந்துள்ளதுடன், ஜனாதிபதி சந்திரிகா தனது ஜனாதிபதி சேவையிலே பத்து வருடங்களை நிறைவு செய்தமை தொடர்பான வைபவங்களும் கடந்த வாரம் இடம் பெற்றுள்ளன.

**ஜனாதிபதி சேவையிலே பத்து வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள சந்திரிகா இதுவரை சாதித்த சாதனைகள் தான் யாவை? எனும் கேள்வி எமது மனதிலே இயல்பாகவே எழுகின்றது. நிறைவேற்று அதிகாரமென்னும் உயர்ந்த வலுவை தனது கைகளிலே வைத்துள்ள சந்திரிகா பத்து வருடங்களில் உருப்படியாக, ஆக்கபூர்வமானதாக எதையாவது சாதித்தாரா? இல்லவேயில்லை. ஆனால் பத்து வருடங்ளை பக்குவமாக போக்கியிருக்கிறார். இதுவே பெரிய சாதனையாகும்.**

ஜனாதிபதி சேவையிலே பத்து வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள சந்திரிகா இதுவரை சாதித்த சாதனைகள் தான் என்ன? எனும் கேள்வி எமது மனதிலே இயல்பாகவே எழுகின்றது. நிறைவேற்று அதிகாரமென்னும் உயர்ந்த வலுவை தனது கைகளிலே வைத்துள்ள சந்திரிகா, பத்து வருடங்களில் உருப்படியாக, ஆக்கபூர்வமானதாக எதையாவது சாதித்தாரா? இல்லவேயில்லை. ஆனால் பத்து வருடங்ளை பக்குவமாகப் போக்கியிருக்கிறார். இதுவே பெரிய சாதனையாகும்.

சமாதான முயற்சிகள் விடயத்திலும் ஜனாதிபதியால் எதனையும் சாதிக்க முடியவில்லை. 1994 ஆம் ஆண்டு சமாதான முயற்சிகளை இடைநடுவில் முறித்துக் கொண்டதும், பின்னர் ரணில் முன்னெடுத்து வந்த முன்னேற்றகரமான சமாதான நகர்வுகளை நாடாளுமன்றத்தை கலைத்ததன் மூலமாக குலைத்தது, பொருளாதார ரீதியாக நாட்டைப் பலமடங்கு பின்னோக்கித் தள்ளியது, செம்மணிப் புதைகுழியென தமிழர்கள் ஐந்நூறு பேரைக் கொன்று குவித்தது, பல போர் விமானங்களை ஒரே இரவிலேயே இழந்தமை, 1500 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினரை ஒரு தாக்குதலின் போதே இழந்தமையென சந்திரிகாவின் சாதனைப்பட்டியல்கள் நீண்டு கொண்டேயுள்ளன.

இந்த நிலையில் தான், ஏதோ நிறையவே சாதித்து விட்டதாக மார் தட்டிக் கொள்கிறார் சந்திரிகா. கேவலம் தனது நேரடி நிர்வகிப்பிலேயுள்ள பொலிஸ், நீதி மற்றும் சட்டத்துறைகளின் மீதே குற்றம் சுமத்த வேண்டிய அவல நிலை அவருக்கு. இது ஒன்றே அவரது பத்துவருட சாதனையை பட்டியல் போடப் போதுமானது. இது இவ்வா



றிருக்க வீணே மார் தட்டிக் கொள்ள சந்திரிகா முயற்சிப்பது அழகல்ல. பாவம் அவரால் முடிந்ததெல்லாம் அவ்வளவும் தான்!

இலங்கையின் நீதி மற்றும் சட்டத் துறையை ஜனாதிபதி சாடியுள்ள அதேநேரத்தில், தமிழீழத்திலே சட்டக் கல்லூரியொன்று திறக்கப்பட்டது. அங்கு உரையாற்றிய பலரும் தமிழீழ சட்டத்துறையையும், காவல் துறையையும் நன்கு புகழ்ந்துள்ளனர்.

சர்வதேசப் பிரதிநிதிகளும் இது தொடர்பாக தமது கருத்தை வெளியிட்டுள்ளமையும் கவனத்திற்குரியது. இலங்கையின் சட்டத் துறை மீது அந்த நாட்டின் ஜனாதிபதியே வெறுப்புக் கொண்டுள்ள நிலையில், அந்தச் சட்டம் எவ்வாறு, அடக்கப்படும் ஒரு சிறுபான்மை இனத்துக்கு நியாயமானதாக செயற்பட முடியுமெனும் கேள்வி எழுகின்றது.

இதனடிப்படையில் வைத்து நோக்கின், தமிழ் மக்களுக்குத் தனியானதொரு சட்டத் துறையும், காவல்துறையும் அவசியமேயாகும். இதனைச் சர்வதேசமும் உணர்ந்து கொள்ள சந்திரிகா நல்லதொரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

மேலும் தான் தனது பதவியிலே பத்து ஆண்டுகளை நிறைவு செய்துள்ளமையை இட்டு சிறைக் கைதிகள் பலருக்கும் பொது மன்னிப்பு வழங்கியுள்ளார். சிறு சிறு குற்றங்களுக்காக சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளோருக்கே இவ்வாறு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், குற்றம் ஏதும் புரியாமலேயே விசாரணைகள் எதுவுமின்றி, பல ஆண்டுகளாக சிறைகளில் வாடும் தமிழ் இளைஞர்களை விடுதலை செய்தால், அதுவே சந்திரிகா தனது பத்தாண்டு சேவையில் ஆற்றிய நல்ல பணியாகவிருக்கும்.

இவர் பதவிக்கு வருவதற்கு முன்னரே, சிறைக்குச் சென்ற பல தமிழ் இளைஞர்கள் இன்னும் கைதிகளாகவேயுள்ளனர்.

அவசரகாலத் தடைச்சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம் எனப் பல்வேறு சட்டங்களின் மூலம் தமிழர்களைக் கைது செய்து சிறையில் அடைத்த அரசும், இராணுவ மற்றும் பொலிஸாரும் உலக மனித உரிமைகள் சட்டத்தையே மீறுமளவுக்கு



அந்தக் கைதிகள் விடயத்திலே இதுவரை நடந்து வருகிறார்கள். இந்த நிலைப்பாட்டிலே மாற்றம் ஏற்படுமாகவிருந்தால் சமாதான முயற்சிகளிலும் கணிசமான அளவு திருப்பமொன்று ஏற்படும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் எப்போது ஆரம்பிக்கும் எனப் பலரும் எதிர்பார்த்துள்ள நிலையில், அரசு அதன் மீது அக்கறையின்றி இருந்து வருகிறது. புதிய தீர்வுத்திட்டமென புதிய மொந்தையிலே புளித்துப்போன பழைய கள்ளை ஊற்ற அரசு திட்டமிடுகிறது.

இறுதித்தீர்வு நோக்கிய பேச்சுக்கள், இடையிலே புதிய தீர்வுத்திட்டம் தொடர்பான பரிசீலனை என வெறும் வாய்ச் சவால்களை வெளியிட்டு வரும் அரசு - நிரந்தரத் தீர்வுக்கான வழிகளை முன்வைக்கவில்லை.

புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது என்பதை உணர்ந்துகொண்டு மீண்டும் மீண்டும் பச்சைப் புல்லையே அரசு திணிக்க முயல்கிறது. இந்தத் திணிப்புப் புலிகளைப் பொறுமையிழக்கவும் செய்யலாம்.

இந்த நிலையிலேயே விடுதலைப் புலிகளின் தலைவரினது மாவீரர் தின உரை உலக அரங்கிலே பெரிதும் எதிர்பார்க்கப்படுவதாகவுள்ளது.

இந்த உரையிலே தேசியத் தலைவர் வெளியிடவுள்ள இறுக்கமான கருத்துக்களே உண்மையான இறுதித்தீர்வு எதுவென்பதை உணர்ததுவதாகவிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒட்டுமொத்தத்தில் இந்த வருட மாவீரர் தின உரை, அரசுக்கு விடுக்கும் எச்சரிக்கையாகவும், புலிகளின் நிலைப்பாட்டிலே தெளிவற்று இருப்போருக்கான தெளிவுரையாகவும் அமையும் என்ற எதிர்பார்ப்பு பரவலாக இருக்கிறது.

அரசு சமாதான விரும்பியாக சர்வதேசம் முன் தன்னைக் காட்டிக்கொள்ள முனைந்தாலும், அடுத்தடுத்து நடைபெறும் சில சம்பவங்கள் அரசின் சுயரூபத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன. இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவதிலே இழுபறி நிலையொன்று தோன்றியுள்ள நிலையிலே, பாகிஸ்தானிய போர்க்கப்பல்கள் இரண்டு - இலங்கைத் துறைமுகங்களை அடைந்துள்ளமையானது, இந்தியாவுக்கு இலங்கை விடுக்கும் அபாய அறிவிப்பாகவே நோக்கற்பாலது.

காஷ்மீர் பிரச்சினையடிப்படையிலே பரம விரோதிகளாக விளங்கும் இந்தியாவையும், பாகிஸ்தானையும் தனித்தனியாகத் தன்னை நோக்கி இழுத்து, அவற்றுக்கு இடையிலே இருக்கும் போட்டி மனப்பாங்கைப் பாவித்து, பாதுகாப்பு ஒப்பந்தங்களையும், உதவிகளையும் நிறைவேற்றிக்கொள்வதே இலங்கை அரசின் நோக்கமாகும்.

வெறுமனே இலங்கை, பாகிஸ்தானிய உறவுகளைப் பலப்படுத்துவதற்காகவே போர்க்கப்பல்களின் வருகை அமைந்துள்ளது எனக் கூறப்பட்டாலும், அதன் பின்னணி வேறாகவேயுள்ளது.

உறவுகளைப் பலப்படுத்துவதற்கு போர்க்கப்பல்களைத் தான் அனுப்ப வேண்டுமா? வேறு வழிகளேயில்லையா? என எண்ணுவதற்கு இடமுண்டு. இப்போது பிரச்சினை எதுவெனில், பாகிஸ்தானிய போர்க்கப்பல்கள் இலங்கையிடம் சொல்லிவிட்டு வந்தனவா? அல்லது இலங்கை சொல்லியதால் வந்தனவா? என்பதேயாகும். ♦

# பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தற்போதைய தலைவர் அபாஸ் மீது துப்பாக்கிச் சூடு; 2 பாதுகாவலர் பலி!



காஸாப் பகுதியில் மறைந்த பலஸ்தீனத் தலைவர் யாசிர் அரபாத்துக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் நடைபெற்ற நிகழ்விற்கு வருகைதந்த தற்போதைய பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவரான மொகமட் அபாஸ் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அவர் காயமெதுவுமின்றித் தப்பியபோதும், அவரது மெய்ப்பாதுகாவலர்கள் இருவர் கொல்லப்பட்டதுடன், நான்கு பலஸ்தீனப் பொதுமக்களும் காயமடைந்தனர்.

பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவரான மொகமட் அபாஸ் இந்த அஞ்சலி நிகழ்வுக்கு வருகைதந்தவேளை ஆயுதம் தாங்கியவர்கள் அவருக்கெதிரான சுலோகங்களை வைத்திருந்ததுடன், கோபாவேசமான முறையில் கோஷங்களையும் எழுப்பினர். இவ்வாறு கோஷமெழுப்பியவர்கள் திடீரென அபாஸ் மீதும், ஆகாயத்தை நோக்கியும் துப்பாக்கிவேட்டுக்களை சரமாரியாகத் தீர்த்தனர். இதனை யடுத்து அபாஸின் மெய்ப்பாதுகாவலர்களும், ஆயுததாரிகளை நோக்கித் தாக்குதலை நடத்தினர். இவ்வாறு நடந்த மோதலிலேயே இரண்டு மெய்ப்பாதுகாவலர்கள் உயிரிழந்தனர்.

இநதத் தாக்குதலை அபாஸிற்கு எதிரான அரபாத்தின் அல்-பற்றா இயக்கத்தின் உறுப்பினர்கள் நடத்தியிருக்கலாம் என நம்பப்படுகிறது. அத்துடன் தாக்குதலை நடத்தியவர்களும் தப்பிவிட்டனர்.

இந்தத் தாகுதலுக்குப் பின்னர் பலஸ்தீனத் தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்த அபாஸ் -

இது ஒரு சாதாரண நிகழ்வு. உணர்ச்சிவசப்பட்ட சிலரே இதனைச் செய்துள்ளனர். இது ஒரு அரசியல் சார்ந்ததோ அல்லது தனிப்பட்ட விடயமான தாக்குதலோ அல்ல. அத்துடன் நான் நூறுவீதம் கூறுவேன் இது என்மீது நடத்தப்பட்ட தாக்குதலும் அல்ல எனத் தெரிவித்தார்.

இதேவேளை பலஸ்தீன ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் ஜனவரி மாதம் ஒன்பதாம் திகதி நடைபெறுமென பலஸ்தீன உள்துறை அமைச்சர் அறிவித்துள்ளார். இந்த ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளராக பற்றா அமைப்பினால் தற்போதைய பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவரான அபாஸ் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். யாசிர் அரபாத்துக்குப் பின்னர் அடுத்த நிலைக்கு வருபவர் அபாஸ் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவருக்கு அடுத்த நிலையில் தற்போதைய பிரதமர் அகமட் கூரே மற்றும் பற்றா இயக்கத்துக்கு தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ள தலைவரான பாரூக் கடுமி ஆகியோர் உள்ளனர்.

## இங்கிலாந்து நாடாளுமன்றில் தீபாவளிக் கொண்டாட்டம்!

(லண்டன்)

இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் தீபாவளித் திருநாள் பெரிய அளவில் கொண்டாடப்பட்டது. 2 மணி நேரம் நடந்த விழாவில் தீபாவளி விளக்கு ஏற்றிவைக்கப்பட்டது.

இந்த விழாவில் வெளிநாட்டு அமைச்சர் ஜக்ஸ்ரோ, உள்துறை அமைச்சர் டேவிட் பிளங்கட் ஆகியோருடன் 100 எம்.பிக்களும் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்ற சிற்றுண்டிச்சாலை பாரம்பரிய இந்துமத வழக்கப்படி அலங்கரிக்கப்பட்டிருந்தது. ரங்கோலி கோலங்கள், இந்துக் கடவுளரின் படங்கள், பக்திப்பாடல்கள் என அமர்க்களப்பட்டது. இந்திய உணவு வகைகள் வழங்கப்பட்டன.

பிரதமர் ரொனி பிளேயர் வெளியிட்டுள்ள செய்தியில் -

இஙகிலாந்து முழுவதும் பல்வேறு சமூகத்தினர் தீபாவளியைக் கொண்டாடி வருகின்றார்கள். இந்தப் பண்டிகைக்குக் கிடைத்திருக்கும் பிரபல்யம் - சமூகங்களுக்கிடையேயான உறவை வலுப்படுத்துகிறது. ஒவ்வொரு ஆண்டும் இந்தப் பண்டிகை கொண்டுவரும் சந்தோஷமும், ஒற்றுமையும், உற்சாகமும் என் நெஞ்சைத் தொட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார்.




## விமானத்தில் தொங்கியபடி பயணம்செய்த சிறுவன் விழுந்து பலி

விமானத்தில் தொங்கியபடி பயணம் செய்த 2 சிறுவர்களில் ஒருவன் விமானம் புறப்பட்டதும் தவறிவிழுந்து இறந்தான். அடுத்தவன் தப்பித்துக் கொண்டான்.

சீனாவின் குன்மிங் என்ற இடத்திலிருந்து சோங்கிங் நகருக்கு ஒரு விமானம் புறப்பட்டபோது. 14 வயது மதிக்கத்தக்க 2 அனாதைச் சிறுவர்கள் விமானத்தின் வெளிப்புறப் பகுதியில் தொறறிக்கொண்டனர். விமானம் 700 கிலோமீற்றர் தூரத்தை ஒரு மணி நேரத்தில் கடந்தது. அப்போது 23 ஆயிரம் அடி உயரத்தில் விமானம் பறந்தபோது ஒரு சிறுவன் மட்டும தாக்குப்பிடித்து உயிர் பிழைததான்.

## உலகின் உயர்ந்த கோபுரம் சீனாவில் கட்டப்படவுள்ளது



(பீஜிங்)

சீனா தனது தென்பகுதியான குவாங்கோ நகரத்தில் உலகிலேயே மிக உயரமான கோபுரமொன்றைக் கட்டவுள்ளது. இந்த உயரமான கோபுரம் 580 தொடக்கம் 600 மீற்றர் உயரமுள்ளதாக இருக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கோபுரம் கட்டுவதற்கான பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. கட்டடக் கலைப் புரட்சியில் சீனா - நிதி உட்பட பலவேறு நெருக்கடிகளைச் சந்திக்கின்றபோதும் இவ்வாறான ஒரு முயற்சியைச் செய்வது குறிப்பிடத்தக்கதாகும். உலகின் உயர்ந்த கட்டங்கள்தான் ஒரு நாட்டின் பெருமையைப் பறைசாற்றுமெனில் அதனை நோக்கி சீனா வேகமாகச் செல்வதனையே இது எடுத்துக் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த உயர்ந்த கோபுரம் அமெரிக்காவில் தற்போது புதிதாகக் கட்டப்படவுள்ள உலக வர்த்தக மையக் கட்டடத்தின் உயரத்தை விடவும் (இது 541 மீற்றர்) உயரமானது. அத்துடன் கனடாவின் ரொரன்ரோ நகரில் உள்ள சி.என். தொலைக்காட்சி ஒளிபரப்புக் கோபுரத்தை விடவும் உயரமானதாகும்.

இந்த உயர்ந்த கோபுரத்தைக் கட்டுவதற்கு மூன்று வெளிநாட்டு ஒப்பந்த நிறுவனங்கள் போட்டிபோடுகின்றன. ஆனாலும், வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்களுக்கு இந்தக் கோபுரம் அமைக்கும் பணியைக் கொடுப்பதற்கு சீனாவில் எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன.

## பலூஜா நகரில் தொடர்ந்தும் ஆட்லறி,விமானத் தாக்குதல்



(பாக்தாத்)

பலூஜா நகரைக் கிளர்ச்சிவாதிகளிடமிருந்து மீட்டதாகத் தெரிவித்த அமெரிக்கப் படையினர் அங்கு தொடர்ந்தும் விமான மற்றும் ஆட்லறித் தாக்குதல்களை நடத்திவருவதாகத் தெரிவித்துள்ளனர். அத்துடன் பலூஜா நகரில் கிளர்ச்சிவாதிகளால் உருக்குகளால் கட்டப்பட்டிருந்த நிலக்கீழ் பதுங்குகுழியையும் தாம் அழித்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

பலூஜாவின் மையப்பகுதியில் தற்போது தாம் நின்றுகொண்டிருந்தாலும், அங்கு இயல்பு நிலையை மீளக்கொண்டுவருவதற்கு ஒரு சில நாட்கள் செல்லுமென அமெரிக்கப் படைத் தளபதிகள் தெரிவித்தனர். இதேவேளை பாக்தாத்தின் மையப்பகுதியில் கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் சிதறிக்கிடப்பதாகவும், இவற்றை நாய்களும், பூனைகளும் தின்று வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் அந்தப்பகுதியில் இருக்கும் மக்களுக்கும், மீளத்திரும்பும் மக்களுக்கும் பாரிய சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுமென அங்கு தங்கியுள்ள பி.பி.ஸிசெய்தியாளர் தெரிவித்தார். இந்தச் சடலங்களை அமெரிக்கப் படையினரால் அகற்றமுடியாதுள்ளதாகவும், இதற்கு கிளர்ச்சிவாதிகள் அமெரிக்கப் படையினர்மீது நடத்தும் சினைப்பர் தாக்குதலே காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

பலூஜா மீதான தாக்குதலில் 1200 கிளர்ச்சிவாதிகள் கொல்லப்பட்டுள்ளதாகவும், தமது தரப்பில் 38 படையினர் கொல்லப்பட்டும் 275 பேர் காயமடைந்துள்ளதாகவும், இவற்றைவிட 6 ஈராக்கியப் படையினர் உயிரிழந்துள்ளதாகவும் அமெரிக்க இராணுவம் தெரிவித்தது. அத்துடன் இந்தத் தாக்குதலில் பொதுமக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் மிகவும் குறைவு எனவும், இதற்கு அவர்கள் தாக்குதல தொடங்குவதற்கு முன்னர் பலூஜாவிலிருந்து வெளியேறியதே காரணம் என்று அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனிடையே பலூஜா நகரில் தங்கியுள்ள மக்களுக்கு உதவிகளை மேற்கொள்ளும் வகையில் சென்றவேளை அமெரிக்கப் படையினரால் செஞ்சிலுவைச் சங்க உதவிப் பொருட்களும், பணியாளர்களும் தடுக்கப்பட்டனர். இதனையடுத்து அங்கு செல்வதற்கான அனுமதியைப் பெறும் நோக்கில் அமெரிக்கப் படைகளுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடைபெற்றுவருவதாக செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

பலூஜாவில் மறைந்துவாழும் மக்களுக்கு அவசரமாக உணவு, சுத்திகரித்த நீர் மற்றும் மருத்துவ உதவிகள் வழங்கவேண்டியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். ஆனால், பலூஜாவிலுள்ள மனிதாபிமானத் தேவைகளைத் தாம் நிறைவேற்றிவருவதாகவும், அமெரிக்க இராணுவ பொதுமக்கள் விவகாரப் பிரிவு



- மக்களுக்கான நட்டஈடுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனாலும் பலூஜாவில் சுத்தமான குடிநீர் விநியோகத்தை மேற்கொள்ள ஒரு மாதத்துக்கும் மேல் செல்லுமென அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதேவேளை ஈராக்கிய பிரஜை ஒருவரைக் கொல்லமுயற்சித்தார் என அமெரிக்க படைவீரர் ஒருவர் குற்றச்சாட்டுக்கு இலக்காகியுள்ளார்.

## மேலும் 2 பொலிஸ் நிலையங்கள் மொசூலில் தாக்கி அழிக்கப்பட்டன



(பாக்தாத்)

ஈராக்கின் மொசூல் நகரத்தில் மேலும் இரண்டு பொலிஸ் நிலையங்களைக் கிளர்ச்சிவாதிகள் தாக்கி அழித்துள்ளதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த மோதல்களில் ஆறு ஈராக்கிய தேசிய காவற்படையினர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த இரண்டு பொலிஸ் நிலையங்களையும் ஈராக் படையினர் மீளக் கைப்பற்றுவதற்காக நடத்திய தாக்குதல்களில் ஒரு கிளர்ச்சிவாதி கொல்லப்பட்டதுடன் மேலும் மூவர் காயமடைந்தனர்.

மொசூல் நகரம் தற்போது படையினரின் பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், நகரம் அமைதியான நிலையில் இருப்பதாகவும் தெரிவித்த அமெரிக்கப் படைத் தளபதி பிரிகேடியர் ஜெனரல் காட்டர் காம் - மொசூல் நகரம் தமது கட்டுப்பாட்டில் இல்லை என்று வெளியாகும் செய்திகளையும் மறுத்தார்.

பலூஜா மீதான தாக்குதலை நடத்தும் வேளை, அங்குள்ள கிளர்ச்சிவாதிகள் மொசூல் பகுதிக்கு வருவார்கள் என ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டதுதான். அங்கிருந்தும் இதுவரை குறைவானவர்களே இங்கு வருகைதந்துள்ளனரெனவும் அவர் தெரிவித்தார்.

கடந்தவாரம் மொசூல் பகுதியில் அமைந்துள்ள ஒன்பது பொலிஸ் நிலையங்கள் மற்றும் ஈராக்கியத் தேசிய காவற்படையினரின் முகாம்கள் என்பவற்றைத் தாக்கிய கிளர்ச்சிவாதிகள் அங்கிருந்த ஆயுதங்கள், மற்றும் கறுப்பு உடைகள் என்பவற்றை எடுத்துச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இலங்கை கடற்படை சூட்டதில் தமிழக மீனவர் ஒருவர் காயம்!

தமிழகம் புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினம் கிராமத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள்மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் மீனவர் ஒருவர் காயமடைந்தார்.

ஜெகதாப்பட்டினம் கிராமத்திலிருந்து கடந்த சனிக்கிழமை 300 இற்கும் மேற்பட்ட விசைப் படகுகளில் மீனவர்கள் கடலுக்குச் சென்றனர்.

இவர்களில் மணிமால் (40), சஞ்சீவிவேல் (26), செல்வராஜ் (20), சிவராஜ் (16) ஆகிய நான்கு மீனவர்கள் சென்ற படகு இந்திய எல்லைக்கு அப்பால் சென்றது. அப்போது ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் எச்சரிக்கை விடுத்தவாறு தமிழக மீனவர்களின் படகை நெருங்கினர்.

கடற்படையினர் விரட்டி வருவதை உணர்ந்த மீனவர்கள் நான்கு பேரும் அவசர அவசரமாக இந்திய எல்லைப் பகுதிக்குள் திரும்பும் போது முற்றுகையிட்ட இலங்கை கடற்படையினர், அவர்கள்மீது சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் சிவராஜ் காயமடைந்தார். ஏனைய மூவரும் உயிர்தப்பி கரை சேர்ந்தனர்.

காயமடைந்த சிவராஜ், மணமேற்குடி அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் புதுக்கோட்டை மாவட்ட கடலோர கிராமங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஊழல் மற்றும் மோசடிகளுக்கு நாட்டை நிர்வகிப்பவரே பொறுப்பு!

## ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)

உள்நாட்டில் பொலிஸ் மற்றும் நீதித் துறைகளில் நிலவும் ஊழல்களுக்கும் மோசடிகளுக்கும் குறித்த நிறுவனமோ அல்லது ஒரு தனிநபரோ பொறுப்பு அல்ல. நாட்டை நிர்வகிப்பவர்களே பொறுப்பு என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாலை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசும் போது -

சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டி நாட்டின் கௌரவத்தைப் பாதுகாக்க வேண்டுமானால் குறிப்பிட்ட இரண்டு துறைகளும் சிறப்பாகச் செயலாற்ற வேண்டும். ஆனால் அப்படி சரியாகச் செயற்படவில்லை என சர்வதேச நிறுவனமொன்று சுட்டிக்காட்டியிருப்பதை சம்பந்தப்பட்ட துறையினர் கவனத்தில் எடுக்கவேண்டும்.

இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு மூலம் தீர்வுகாண்பதற்கு பெரும்பான்மையான மக்கள் ஆதரவு வழங்குகின்றனர். ஆனால் எதிர்க்கட்சி ஆதரவு வழங்கத் தயாராக இல்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைக்கு சம்மதிக்க வைப்பதை விட எதிர்க்கட்சியை சம்மதிக்க வைப்பதுதான் தற்போது மிகவும் கடினமாக உள்ளது என்றும் அவர் தனது உரையில் தெரிவித்தார்.

## சீரற்ற...

இதற்கான தீர்வு ஒன்றை மேற்கொள்வதாகத் தெரிவித்ததையடுத்து மக்கள் போராட்டத்தைக் கைவிட்டனர். காலை 11 மணிக்கு பின்னர் அப்பகுதி வழமைநிலைக்குத் திரும்பியது. இந்தப்பகுதி மணவர்களை பாடசாலைக்கு ஏற்றிச் செல்லாது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் வட பிராந்தியப் போக்குவரத்துச் சபையின் முகாமையாளரான உதயகுமாருடன் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து இன்றிலிருந்து காலையும் பாடசாலைவிடும் நேரத்திலும் பஸ் சேவையை நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டது.

## கூட்டமைப்பு எம்.பி...

சு.ப.தமிழ்செல்வனுக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பு, அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் தலைமையிலான குழுவினரின ஐரோப்பிய விஜயம் ஆகியவற்றுக்குப் பின்பு இடம்பெறவிருக்கும் இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்குமெனக் கருதப்படுகின்றது.

மேற்படி விடயங்கள் குறித்து கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்தச் சந்திப்பின் போது விளக்கிக் கூறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனைத் தவிர திருகோணமலை மாவட்டத்தில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கொண்ட விழிப்புணர்வு நடவடிக்கை, தெற்கு மக்களுக்கு தன்னாட்சியுள்ள இடைக்கால நிர்வாக யோசனை பற்றிய விளக்கமளித்தல் -

இதற்காக சர்வதேச சமூகத்தின் ஆதரவு திரட்டும் நடவடிக்கை மற்றும் எதிர்வரும் வரவு செலவுத் திட்டம் போன்ற விடயங்கள் குறித்தும் கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெறும் என தெரியவருகிறது.

## கட்சியிலிருந்து...

கட்சியின் தலைவர் எல்லாவெல மெத்தானந்த தேரர், செயலாளர் சம்பிக்க ரணவக்க, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க, நாடாளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கினை நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உயர் நீதிமன்றம், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து புஞ்ஞானந்த தேரரை நீக்குமாறு தேர்தல் ஆணையாளருக்கும் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கும், ஜாதிக ஹெல உறுமய விடுத்த வேண்டுகோளை இரத்துச் செய்யுமாறு பணிப்புரை விடுத்தது.

## தொண்டர்...

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானதைத் தொடர்ந்து, இப்பிரதேசத்தில் கடற்படையினர் முகாம் ஒன்றை அமைத்துள்ளனர். இதனைத் தொடர்ந்து இந்தப்பகுதிக்கு பொது மக்கள் செல்வது கடந்த இரண்டு வருடங்களாக தடைசெய்யப்பட்டிருந்தது. இதனால் மேய்ச்சல் தரையைப் பயன்படுத்த முடியாது பண்ணையாளர்கள் மிகுந்த சிரமங்களை அனுபவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (04) (10)

## மட்டக்களப்பு – அம்பாறை...

அக்கரைப்பற்றில் நிரந்தரமாகப் படைகள் நிறுத்தப்பட்டுப் பொலிஸாரினதும் படைகளினதும் தீவிர விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளதுடன் புதிய காவலரண்கள் நகரத்தில் அமைக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஆராயும் கூட்டமொன்று நேற்று இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் தற்போதைய பாதுகாப்புப் பிரச்சினைகள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டதாக கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் நெவில் விஜேசிங்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு நகரில் இருந்து வாழைச்சேனைவரை சோதனைச் சாவடிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இந்தக் கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் அதிகாரிகளும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ஒன்றரை வயது...

குழந்தை தாயிடம் செல்வதாகக் கூறிவிட்டுச் சென்று இடிந்த நிலையில் காணபபட்ட கிணற்றினருகே காணப்பட்ட தொட்டியில் தண்ணீர் அளைந்து விளையாடிக் கொண்டிருந்தது.

அவ்வேளையே தவறி கிணற்றில் வீழ்ந்ததாகத் தெரியவருகிறது. இந்தச் சம்பவம் நடைபெற்ற அரை மணி நேரத்தின் பின்னரே குழந்தையின் தந்தை - குழந்தையைத் தேடிச சென்றபோது உயிரிழந்த நிலையில் குழந்தை கிணற்றில் மிதப்பதைக் கண்டதாகத் தெரியவருகிறது.

உயிரிழந்த குழந்தையின் சடலம் தற்போது வைத்திய பரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(தீ)

## இராணுவச்...

பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இராணுவச் சாரதியான முதியான் சலாகே விஜேசிங்க - சாவகச்சேரி பதில் நீதிவான் கந்தசாமியின் வாசஸ்தலத்தில் ஆஜர் செய்யப்பட்டபோதே அவரை எதிர்வரும் புதன்கிழமை வரை யாழ்.சிறையில் தடுத்துவைக்க உத்தரவிட்டார்.

## அடுத்த இரண்டு...

மாகாணத்திலும் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் குளங்கள் நிரம்பி வழிவதுடன் பல இடங்களில் வெள்ள ஆபத்தும் ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் வங்கக் கடலில் மீண்டும் நேற்றுமுன்தினம் தாழமுக்கம் ஒன்று ஏற்பட்டதால் குடாநாடு, வன்னி உள்ளிட்ட பகுதிகளில் பலத்த மழை பெய்துவருகிறது.

இந்தத் தாழமுக்கத்தால் இன்றும் நாளையும் பலத்த மழை பெய்வதுடன் இடிமுழக்கமும் ஏற்படும் என்றும் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறும் யாழ். வானிலை அவதான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை கடந்த வருடங்களில் குடாநாட்டில் பெய்த சராசரி மழைவீழ்ச்சியைவிட இந்த ஆண்டில் இதுவரை சுமார் 20 மி.மீ மழை அதிகமாகப் பெய்துள்ளது.

குடாநாட்டின் சராசரி மழைவீழ்ச்சி 1230 மில்லிமீற்றராகும். ஆனால், இந்த வருடம் 1249.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இதனால் கடந்த ஆண்டுகளைவிட இந்த ஆண்டு கணிசமான மழைவீழ்ச்சி அதிகமாகக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த முதலாம் திகதி தொடக்கம் - நேற்றுக்காலை 9 மணிவரையான இரண்டு வார காலத்தில் மட்டும் குடாநாட்டில் 266.2 மி.மீ. மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொருளாதார நெருக்கடி...

இந்த வருடத்தில் மட்டும் இலங்கை ரூபாவின் பெறுமதி 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. இந்தவருட இறுதியில் இந்த வீழ்ச்சி 9 வீதமாக அதிகரிக்குமெனவும் பொருளாதார நிபுணர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

இந்தப் பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கும் - அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட துண்டுவிழும் தொகையை நிரப்பவும் மத்திய வங்கி மூலமாக 6500 கோடி ரூபா நாணயங்களை வெளியிட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த முடிவு குறித்து பொருளாதார நிபுணர்கள் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இவ்வாறு பெருமளவு நாணயத் தாள்களை அச்சிட்டு தனது நெருக்கடியை அரசாங்கம் தீர்க்க முனைந்தால் பொருட்கள் கொள்வனவு ஆற்றல் மேலும் பாதிக்கப்படுமெனவும் இதனால் சாதாரண மக்கள் பெரும் பொருளாதாரப் பிரச்சினைக்கு முகம்கொடுக்க நேரிடும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை குறித்து ஐ.தே.கவும் பலத்த கண்டனத்தை வெளியிட்டுள்ளது. தனது பொய்யான வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக அரசாங்கம் சட்டரீதியற்ற நடவடிக்கைகளில் ஈடுபட முனைவதாகவும் அரச ஊழியர்களுக்கு சிறிய சம்பள உயர்வை வழங்கி பெருந்தொகையான பணத்தை சுரண்ட அரசு தீர்மானித்திருப்பதாகவும் முன்னாள் பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன தனது விசனத்தை வெளியிட்டுள்ளார்.

உ

சிவமயம்








புதுக்கடை திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருடம் கார்த்திகை மாதம் 3ம் நாள் (18.11.2004) வியாழக்கிழமை காலை 10.45 மணி முதல் 11.45 மணிவரையான, மகர லக்கினமும் திருவோண நட்சத்திரமும் கூடிய சுபவேளையில், எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற



சுந்தர்சன்
SUNDHARSON



என்னும் புதுக்கடையை ஆரம்பிக்கவுள்ளதால், அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

யாழ்வீதி, மானிப்பாய்.
T.P :021-222-2751
Suntel : 4591569
Fax : 021-222-2751

உரிமையாளர்
சுந்தர்சன்

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பிதழாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்

(C/3365) வணக்கம்.

## மரண அறிவித்தல்

### ம.மார்க்கண்டு

நெல்லியடி மகாத்மா வீதியைச் சேர்ந்தவரும், இமையாணன் அமெரிக்கன் தமிழ்க் கலவன் பாடசாலையின் முன்னாள் உப அதிபருமாகிய ம. மார்க்கண்டு நேற்று (15.11.2004) அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று (16.11.2004) 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

தகவல்:
உறவினர்கள்.

(இ)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.11.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.